பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 31 புதன்கிழமை 14.05.2025 கதிர் 186

### இனி இது ரகசியம் அல்ல!

கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தை நிலைநாட்ட தேசிய மக்கள் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் கட்சிக்கும் இடையே தற்போது பெரும் போட்டி உருவாகியுள்ளது. அங்கு ☞ 2

## எதிர்க் கட்சிகளுக்கு ரில்வின் எச்சரிக்கை

### பதிலுக்குப் பதில் தரப்படும் என்கிறார்

**தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை பலத்துடன் வெற்றிபெற்றுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதற்கு எதிர்க்கட்சிகள் தடையாக இருந்தால், அந்தக் கட்சிக்கும் நாங்கள் தடைகளை ஏற்படுத்த நேரிடுமென மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

**இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஆட்சி அமைப்பதற்கு தேவையான** ☞ 2



## நிலையியல் குழுக்களை அறிவிக்க கரு வலியுறுத்து

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் மாகாண ஆளுநர்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிலையியல் குழுக்களை நிறுவுவதற்கான வர்த்தமானி தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தலை தாமதமின்றி வெளியிடுமாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கருஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகெங்கிலும் உள்ள பிரதிநிதித்துவ அமைப்புகளில் முக்கிய பிரிவுகளாக இருக்கின்ற விடயம் நிலையியல் குழுக்களை நிறுவுவதாகும். இதுதொரு மிக முக்கியமான நடைமுறையுமாகும். இந்தக் குழுக்கள், வெளிப்படைத்தன்மை, மேற்பார்வையை மேம்படுத்துகின்றன. பொறுப்புக்கூறலை உறுதி செய்கின்றன உள்ளூராட்சி மன்றங்களின் ஒட்டுமொத்த செயற்றிறனை மேம்படுத்துகின்றன.

இலங்கையில் உள்ளூராட்சி தொடர்பான சட்டங்கள் நிலைக்குழுக்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தாலும், அவற்றின் உருவாக்கம் மற்றும் செயற்பாடு குறித்த விரிவான வழிகாட்டுதல்கள் அவற்றில் இல்லை. 2011ஆம் ஆண்டிலும் - மீண்டும் 2018ஆம் ஆண்டிலும் தொடர்புடைய ☞ 8

## பெருந்தோட்ட மக்களுக்கு 2025க்குள் சம்பள அதிகரிப்புடன் 10 பேர்ச் காணி

### அமைச்சர் வித்தியாரத்ன உறுதியளிப்பு

பெருந்தோட்ட மக்களுக்கு சம்பள அதிகரிப்பு மாத்திரமின்றி, 10 பேர்ச் காணி வழங்கப்படும். இவ்வாண்டுக்குள் அந்த மக்களுக்காக 6000 வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு நாம் பொறுப்பு என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்ட மக்களுக்கு சம்பள அதிகரிப்பு நிச்சயம் வழங்கப்படும். வரவு - செலவு திட்டத்திலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளம் வழங்கப் படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ☞ 8

## வீதி விபத்துக்களைத் தடுக்க 2 மாதங்களுள் புதிய திட்டம்

நாடு முழுவதும் அதிகரித்து வரும் வீதி விபத்துகளைத் தொடர்ந்து, 16 நிறுவனங்களால் கூட்டாக தயாரிக்கப்பட்ட வீதி விபத்துகளைத் தடுப்பதற்கான செயல் திட்டம் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் செயற்படுத்தப்படும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்று மாதங்களுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட 'வீதிப் பாதுகாப்பை' மையப்படுத்திய செயற்றிட்டத் தயாரிப்பு தற்போது நிறைவுக்கு வந்துள்ளதுள்ளது. இத்திட்டமானது வீதி ☞ 2

## தமிழினப் படுகொலை நினைவகம் அமைக்கப்பட்டதால் நாமல் கவலை

கனடா ஒரு தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னத்தைத் நிர்மாணித்துள்ளமை கவலைக்குரியது. அமைதி மற்றும் ஒற்றுமையை நோக்கிச் செயல்படுவதற்குப் பதிலாக இந்தக் குழுக்கள் தங்கள் சொந்த நலன்களுக்காகப் பிரிவினையைத் தூண்டிவிடுகின்றன. இந்தப் போக்கு தொடர்ந்தால், உண்மையான நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் கனடாவின் நம்பகத்தன்மையை அது குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடும். இந்த செயல்முறையில் கனடா ஒரு தனிப்பட்ட நலன்களைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கடனாவில் பிரம்டன் நகரில் சிங்கௌசி பொதுப்பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம் குறித்து அதிருப்தியை வெளிப்படுத்தி நாமல் ராஜபக்ச தனது உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் இதனைப் பதிவேற்றம் செய்துள்ளார்.

அப்பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இலங்கை இராணுவம் , விடுதலைப் புலி பயங்கரவாதத்துக்கு எதிராக முன்னெடுத்த மோதலில் எந்த இனப்படுகொலையும் சர்வதேச சட்டத்துக்கமைய நிரூபிக்கப்படவில்லை அல்லது நிரூபிக்கப்பட முடியாத நிலையில், கனடா ஒரு தமிழ் இனப்படுகொலை நினைவுச் ☞ 2

## விபத்து குறித்த விசாரணையை நேற்று தொடங்கியது விசேட குழு

கொத்மலை - கெரண்டிஎல்ல பகுதியில் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற பேருந்து விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு பரிந்துரைகளை சமர்ப்பித்ததற்காக பொலிஸாரால் நியமிக்கப்பட்ட குழு நேற்று விபத்து நடந்த இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

விபத்து நடந்த இடத்தை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைமை அதிகாரி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி ருவன் ☞ 2

## கூட்டமைப்பைத் தடைசெய்திருந்தால் பல பிரச்சினைகளை தீர்த்திருக்கலாம்

### சரத் வீரசேகரவுக்கு வந்த ஆசை

கனடாவில் பிரம்டன் நகரில் சிங்கௌசி பொதுப் பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம் தொடர்பில் இலங்கை ஆளும்தரப்பு கடும் அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டும். போர் முடிவடைந்ததன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மகிந்த ராஜபக்ச தடை செய்திருந்தால் பல பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிருக்கலாம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கனடாவில் உருவாக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கனடாவில் பிரம்டன் நகரில் சிங்கௌசி பொதுப் பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம் தொடர்பில் இலங்கை ஆளும்தரப்பு கடும் அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையில் இனங்களுக்கிடையில் வீண்பிரச்சினைகளை ஏற்படுத்தும். இவ்வாறான செயற்பாடுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் அரசியல் செயற்பாடுகளுக்காகவே தமிழ்த் ☞ 2



## நல்லிணக்கம், நல்லுறவு இல்லாத என்.பி.பிக்கு ஆதரவு தரமாட்டோம்

### ஈபிடிபி செயலாளர் டக்ளஸ் அறிவிப்பு

தேசிய மக்கள் சக்தி என்ற ஜே.வி.பியிடம் தேசிய நல்லிணக்கம், இனங்களுக்கிடையிலான நல்லுறவு என்பது அறவே இல்லை. அதனால் உள்ளூர் அதிகார சபைகளில் என்பிபிக்கு நாம் ஆதரவு வழங்கப்போவதில்லை. இதுவே கட்சியின் முடிவாகவும் இருக்கின்றது என்று ஈபிடிபி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உள்ளூர் அதிகார சபையில் போட்டியிட்ட ☞ 8

## இனி இது .....

எந்த பெரிய கட்சியும் ஐம்பது சதவீதத்திற்கு மேல் வாக்குகளைப் பெறவில்லை என்பதால் எதிர்க் கட்சிகள் சேர்ந்து என்பிபியை வீழ்ந்தலாம் என்ற முயற்சிகள் தீவிரம் பெற்றுள்ளன. என்பிபிக்கோ தலைநகரத்தை இழப்பது கௌரவக் குறைச்சலாகப் படுவதால் எப்பாடுபட்டாவது அதனைத்தக்கவைப்பதற்குப் போராடுகின்றது.

கொழும்பு மாநகர சபைக்கு தேசிய மக்கள் கட்சி 81,814 (36.92%) வாக்குகளைப் பெற்று, 48 ஆசனங்களைப பெற்றுள்ளது. இரண்டாவது இடத்தில் ஐக்கிய மக்கள் சக்தி, 58,375 (26.34 %) வாக்குகளைப் பெற்று, 29 ஆசனங்களை வென்றது.

கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தை நிலைநாட்ட 59 இடங்கள் தேவை, இதனால் தேசிய மக்கள் கட்சிக்கு மேலும் 11 இடங்கள் இன்னும் தேவையாக இருக்கின்றன. ஐக்கிய மக்கள் சக்திக்கு 30 இடங்கள் தேவை.

கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய அமைதிக் கூட்டணி, சர்வ ஜன பலகய, பொதுஜன ஐக்கிய பெரமுன, ஜாதிக நிதாச பெரமுன, ஐக்கிய குடியரசு முன்னணி, ஜனநாயக தேசியக் கூட்டணி மற்றும் பிற சுயாதீனக் குழுக்கள் எனபன 40 இடங்களைப் பெற்றுள்ளன.

இவற்றில் சிலவற்றின் ஆதரவுடன் ஆட்சியைப் பிடிப்பதில் இரு கட்சிகளுமே கடும் முயற்சியில் குதித்துள்ளன. இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் கை ஓங்கி வருவதாகச் சொல்லப்படுகின்றது.

இந்த நிலையில்தான் தேசிய மக்கள் சக்தி முன்னிலை பெற்றுள்ள சபைகளில் அதனை ஆட்சியமைக்கவிடாது வீழ்த்தினால் பதிலுக்குத் தாங்களும் எதிர்க் கட்சிகள் முன்னிலை பெற்றுள்ள சபைகளில் ஆட்சியைப் பிடிப்பதற்கு எத்தனிப்போம் என்று ஜேபிவி செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். கடைசியில் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாட்டுக்கு, அதாவது முன்னிலைபெற்ற கட்சிகள் அந்தந்தச் சபைகளில் ஆட்சியமைக்க உரித்துடையன என்ற நிலைப்பாட்டுக்கு ஜேவிபியும் வந்து சேரவேண்டியிருக்கிறது. ஆனால், எதிர்க் கட்சிகள் அதனை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை என்பதுதான் தெற்கில் பிரச்சினை.

கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தை நிலைநாட்ட எதிர்க்கட்சிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தொண்ணூறு சதவீதம் நிறைவடைந்துள்ளதாகவும், கொழும்பு மாநகர சபையில் தனது கட்சி நிச்சயமாக அதிகாரத்தை நிலைநாட்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய கொழும்பு பிரதான அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் தெரிவித்துள்ளார்.

இதுதான் ரில்வின் கொதிப்படைவதற்குக் காரணம். யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் பல சபைகளிலும் என்பிபி முன்னிலை பெறாதபோதும் மற்றவர்களைக் கைகளுக்குள் போட்டுக்கொண்டு ஆட்சியமைக்க முயன்றபோது இத்தகைய முயற்சிகள் அவரது கட்சிக்கு இனிப்பாக இருந்தன. கொழும்பில் பிரச்சினை வந்ததும் அத்தகைய முயற்சிகள் கசக்கத் தொடங்கியுள்ளன.

.........................

முன்னாள் நாடாளுமன்ற உயரதிகாரி ஒருவரின் கடந்த காலச் செயற்பாடுகள் தொடர்பில் தீவிரமான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த காலங்களில் அவர் முப்பதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டார் எனவும் இதற்காக நாடாளுமன்றத்தின் வெளியுறவு மற்றும் நெறிமுறை அலுவலகத்திலிருந்து ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நிதியைப் பெற்றுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. இதனால்தான் அவர் விசாரணை வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவின் உத்தரவின் பேரில், மேற்படி அலுவலகத்தில் நிதியை கட்டுப்பாடற்ற முறையில் பயன்படுத்துவது குறித்து விசாரிக்க விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரி சட்டமன்ற விவகாரம் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக ஒன்பது நாள் வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அதற்காக மூன்று லட்ச ரூபாய்க்கு மேல் அரச பணத்தைப் பெற்றுள்ளார் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

தனது விருப்பப்படி ஏராளமான வெளிநாட்டுப் பயணங்களில் மற்றவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்காமல் இவர் மட்டுமே பங்கேற்றார் என்றும் இவர் மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது.

மேலும், இந்த முன்னாள் உயரதிகாரி கடந்த காலத்தில் வாகனங்களை தவறாகப் பயன்படுத்தினார் எனவும் விசாரணைகளின் போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

.......................................

தமிழ் அரசுக் கட்சிக்குள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனியாவர்த்தனம் வாசித்துக் கொண்டிருப்பது ஒன்றும் புதிதில்லை. உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் கட்சித் தலைமையும் அதை அனுமதித்து அனுசரித்து நடந்திருந்தது. நாடாளுமன்றத் தேர்தலில் நடந்தது போன்று உட்கட்சி மோதல் வெளிப்பட்டு பின்னடைவுகள் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் அவர் கட்சியால் நீளக் கயிற்றில் விடப்பட்டிருந்தார்.

தேர்தலுக்குப் பின்னரும் அந்த நிலையையே தொடரும் சிறீதரன் எம்பி நேற்று கட்சியின் மாவட்டக் கிளையைக் கூட்டி அங்குள்ள மூன்று சபைகளுக்கமான தவிசாளர் உப தவிசாளர்களைத் தானே முன்னின்று தெரிவு செய்துள்ளார். கட்சித் தலைமையுடன் எந்தவிதக் கலந்தாலோசனையும் இன்றி இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சி சபைகளிலும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கவுள்ள நிலையில், அந்த மூன்று சபைகளுக்குமான தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவு கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையில் நடைபெற்றுள்ளது.

மூன்று உள்ளூராட்சி சபைகளுக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கும், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை நிர்வாக உறுப்பினர்களுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தெரிவுகள் இறுதி செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டாலும், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனே அவர்களைத் தெரிவு செய்தார் என்பதே உண்மை.

அதற்கமைய கரைச்சி பிரதேச சபையின் தவிசாளராக வேழமாலிகிதனும், உப தவிசாளராக சிவகுமாரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பூநகரி பிரதேச சபையின் தவிசாளராக ஸ்ரீரஞ்சனும், உப தவிசாளராக குணலக்சுமியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளராக சுரேனும், உப தவிசாளராக செல்வராசாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தெரிவுகள் தொடர்பான மாவட்டக் கிளையின் எழுத்து மூல தீர்மானம், கிளிநொச்சி மாவட்டக்கிளைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரனால் கட்சியின் தலைவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பொருள் என்னவென்றால் என்னை மீறி இந்தச் சபைகள் விடயத்தில் நீங்கள் வேறு எந்த முடிவும் எடுக்கக்கூடாது என்பதுதான்.

பார்க்கலாம் இனி வரும் நாட்களில் என்ன நடக்கிறது என்று.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## எதிர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பான்மை இல்லாத சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஏனைய கட்சிகளைவிட தேசிய மக்கள் சக்திக்கே அதிகமான சபைகளில் பெரும்பான்மை இருக்கிறது. அதனால் அந்த சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு எதிர்க்கட்சிகள் தடையாக இருந்தால், அந்த கட்சிக்கு நாங்களும் தடைகளை ஏற்படுத்த நேரிடும்.

அதனால் மக்களின் தீர்மானத்துக்கமைய பெரும்பான்மை பலம் இருக்கும் சபைகளில் ஆட்சியமைப்பதற்கு தடையாக இருக்க வேண்டாம் என எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்கிறோம். உள்ளூராட்சி தேர்தலுக்கு பின்னர் யார் என்ன சொன்னாலும் இந்த தேர்தலில் அதிக வெற்றிவாய்ப்புகளை பெற்றுக்கொண்டது தேசிய மக்கள் சக்தியாகும்.

நாங்கள் 267 சபைகளை வெற்றி பெற்றுள்ளதுடன் அதில் 120 சபைகளில் எந்த பிரச்சினையும் இன்றி ஆட்சியமைக்க முடியும். அதன் பிரகாரம் 32 சபைகளில் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் சமமான உறுப்பினர்கள் தெரிவாகி இருக்கின்றனர். அந்த சபைகளில் எந்த தடையும் இன்றி ஆட்சியமைக்க முடியும்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு 14 சபைகளில் பெரும்பான்மை கிடைத்துள்ளபோதும் அதில் 13 சபைகளில் அவர்களுக்கு தனித்து ஆட்சியமைக்க முடியாது. அரசாங்கத்துக்கு தனித்து ஆட்சியமைக்க முடியாமல் இருக்கும் ஓரிரு சபைகளில் ஆட்சியமைப்பதற்கு தேவையான கலந்துரையாடல்களை தற்போது மேற்கொண்டு வருகிறோம்.

அதன் பிரகாரம் கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட நாடுபூராகவும் உள்ள சபைகளில் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க முடியுமாகி இருப்பது அரசாங்கத்துக்காகும்.

கொழும்பு மாநகரசபையில் பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள அரசாங்கத்துக்கு 11 உறுப்பினர்களே குறைவாக இருக்கிறது. சுயாதீன குழுக்கள் மற்றும் ஏனையவர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடி இருக்கிறோம். ஏனைய கட்சிகளை எடுத்துக்கொள்ளும்போது அந்தந்த கட்சிகளுக்கிடையில் இழுபறி நிலை இருந்து வருகிறது. இதன் நன்மையும் அரசாங்கத்துக்கே கிடைக்கும்.

அதேநேரம் துண்டு, துண்டு கட்சிகளை ஒன்றிணைத்துக்கொண்டு ஆட்சியமைப்பது முறையல்ல. அதனால் நாங்கள் சபைகளில் ஆட்சியமைக்கும் போது எதிர்க்கட்சிகள் இடையூறுகளை ஏற்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## வீதி விபத்துக்களைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்துக்களால் ஏற்படும் இறப்புகள் மற்றும் காயங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டே ஆரம்பிக்கப்பட்டிருந்து.

வீதிப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பிலுள்ள அனைத்து முக்கிய பங்குதாரர்களும் இந்த திட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்படுகிறார்கள். இதில் பயணிகள் போக்குவரத்து ஆணையகம், ரயில்வே துறை, பொலிஸார், மோட்டார் போக்குவரத்து துறை, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் உள்ளிட்ட பலதரப்பட்டவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

உலகவங்கியின் கூற்றுப்படி, இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 38,000 வீதி விபத்துகள் பதிவாகுவதோடு இதன் விளைவாக சுமார் 3,000 உயிரிழப்புக்கள் நிகழ்கின்றன. அத்துடன் 8,000 பேர் படுகாயமடைகிறார்கள்.

மதிப்பிடப்பட்ட வருடாந்த தனிநபர் வீதி விபத்து இறப்பு விகிதமானது தெற்காசிய நாடுகளில் மிக உயர்ந்ததாக காணப்படுவதோடு உலகில் சிறப்பாக செயற்படும் நாடுகளை விட ஐந்து மடங்கு அதிகமாக காணப்படுவதாக கூறப்படுகின்றது.

## கூட்டமைப்பைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. போர் முடிவடைந்ததன் பின்னர் அதனை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தடை செய்திருக்கவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடைசெய்யாமல் அலட்சியப்படுத்தியது மகிந்த ராஜபக்ச செய்த அரசியல் ரீதியான தவறாகும். போர் முடிவடைந்ததன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் கடந்த காலங்களை மறந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது அரசியல் இலாபத்துக்காக அரசியல் அதிகார பகிர்வு பற்றி பேசி தேவையில்லாத பிரச்சினைகளை ஏற்படுத்தி, இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரிவினைவாதத்தை மீண்டும் தோற்றுவிக்கும் செயற்பாடுகள் தற்போது இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. அரசியல் பிரபல்யத்துக்காக தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களை அலட்சியப்படுத்துவதை ஆளும்தரப்பு தவிர்க்கவேண்டும் என்றார்.

## விபத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணசேகர உள்ளிட்ட குழுவினரே ஆய்வு செய்தனர்.

பின்னர், கொத்மலை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று விபத்துக்குள்ளான பேருந்தை ஆய்வு செய்தனர். எதிர்காலத்தில் அனைத்து தொடர்புடைய சாட்சியங்கள் மற்றும் ஏனைய அறிவியல் சான்றுகள், மோட்டார் வாகன ஆய்வாளர் உள்ளிட்ட நிபுணர்கள் வாகனத்தை சோதனை மேற்கொண்டதன் பின்னர் இறுதி அறிக்கை வெளியிடப்படும் என்று அவர்கள் கூறினர்.

இதேவேளை, கொத்மலை ரம்பொடை - கெரண்டிஎல்ல பகுதியில் கடந்த 11ஆம் திகதி அதிகாலை விபத்துக்குள்ளான பேருந்தில் இருந்த பயணிகளின் பயணப் பொதிகள், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் ஏனைய பொருட்கள் கொத்மலை பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அடையாளத்தை உறுதிப்படுத்துவதன் ஊடாக குறித்த பொருட்களை பெற்றுக்கொள்ள முடியுமென கொத்மலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் வஜிர ரத்நாயக்க தெரிவித்தார்.

விபத்து நடந்த இடத்தில் பிரதேச மக்களின் உதவியுடன் கண்டெடுக்கப்பட்ட 35 கையடக்க தொலைபேசிகள், பயணப் பொதிகள் மற்றும் ஏனைய பொருட்கள் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாக கொத்மலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பேருந்து நடத்துனரின் டிக்கெட் புத்தகமும், பணமும் கிடைக்கவில்லை என்றும் அதன்படி, இந்த டிக்கெட் புத்தகத்தைத் தேடி பொலிஸார், இராணுவம் மற்றும் கிராம மக்கள் பல இடங்களில் தேடியும், அது கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

சாரதி உயிரிழந்தார், நடத்துனரும் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருவதன் காரணமாக விபத்து நடந்த நேரத்தில் எத்தனை பயணிகள் பேருந்துக்குள் இருந்தார்கள் என்பதைச் சரியாகக் கூற முடியாது எனவும் பொலிஸ் பொறுப்பதிகாரி சுட்டிக்காட்டினார்.

## தமிழினப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின்னத்தைத் நிர்மாணித்துள்ளமை கவலைக்குரியது.

தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம் என்று அழைக்கப்படுவது, கனேடிய ஆளும்தரப்பால் அரசியல் ரீதியாக இயக்கப்படும் ஒரு நடவடிக்கையாகத் தெரிகிறது இது நீண்ட காலமாக தமிழ் புலம்பெயர்ந்தோருக்குள் உள்ள சில பிரிவுகளால் முன்னெக்கப்படுகிறது. அமைதி மற்றும் ஒற்றுமையை நோக்கிச் செயல்படுவதற்குப் பதிலாக, இந்தக் குழுக்கள் தங்கள் சொந்த நலன்களுக்காகப் பிரிவினையைத் தூண்டிவிடுகின்றன.

1975 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மேயர் ஆல்ஃபிரட் துரையப்பாவைக் கொன்றதன் மூலம் வன்முறை செயற்பாடுகளை தொடங்கிய விடுதலைப் புலிகள், ஏராளமான கொடூரமான செயல்களைச் செய்தனர். இந்தப் பயங்கரவாதக் குழு ஆயிரக்கணக்கான தமிழ் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்து, அவர்களை அவர்களது குடும்பங்களிலிருந்து பிரித்து, பெரும் துன்பத்தை ஏற்படுத்தியது. பல தசாப்த கால வன்முறை மற்றும் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சட்டபூர்வமான இராணுவ நடவடிக்கையில் இலங்கை ஆயுதப் படைகள் விடுதலைப் புலிகளை ஒழித்தன.

விடுதலைப் புலிகள் மற்றும் காலிஸ்தான் போராளிகள் போன்ற பயங்கரவாதத்துடன் தொடர்புடைய குழுக்களை ஆதரித்த கனடாவின் வரலாறு, உலகளாவிய பயங்கரவாதம் குறித்த அதன் நிலைப்பாடு குறித்து கேள்விகளை எழுப்புகிறது. இந்தப் போக்கு தொடர்ந்தால், உண்மையான நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் கனடாவின் நம்பகத்தன்மையை அது குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடும். இந்த செயல்முறையில் கனடா ஒரு தனிப்பட்ட நலன்களைக் கொண்டிருப்பதாக தெரிகிறது.

இலங்கை ஆளும்தரப்பு கொழும்பில் உள்ள கனேடிய உயர் ஸ்தானிகரை அழைத்து, கனடா துல்லியமான வரலாற்றுக் கதைகளை ஆதரிக்குமாறு முறையாக எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். ஒரு சட்டபூர்வமான போரின் பின்னணியில் ஒரு தவறான இனப்படுகொலைக் கதையை ஊக்குவிப்பது வரலாற்றைத் திரிபுபடுத்துவது மட்டுமல்லாமல், இலங்கையில் நல்லிணக்க செயல்முறைக்கு கடுமையான அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும்.

இந்தப் பிரச்சினையில் ஆளும்தரப்பு தீர்க்கமாகச் செயல்படத் தவறுமாயின் அது ஆயுதப்படைகள், நாட்டின் இறையாண்மை மற்றும் மக்களுக்கு அவமானமாக அமையும். இலங்கையின் தேசிய நலன்களைப் பாதிக்கும் முக்கியமான விஷயங்களை திறம்படக் கையாள்வதில் ஆளும்தரப்பின் இயலாமையையும் இது எடுத்துக்காட்டுகிறது என்றார்.

# பனை மரங்களை ஈடு வைத்து இனி வங்கிக் கடன் பெறலாம்

## பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை

(சுபேசன்)

வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள தங்க நகைகள் மற்றும் நிலங்களை பொறுப்பு வைப்பது போன்று பனை மரங்களை பொறுப்பு வைத்து வங்கிக் கடனைப் பெறும் திட்டம் ஒன்றை இவ் வருட இறுதிக்குள் பனை அபிவிருத்திச்சபை அறிமுகப்படுத்த இருப்பதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

பனைமரம்பணமரமாகமாற்றமடையப்போகின்றது. காணிகளில் உள்ள பனை மரங்களை அவசரப்பட்டு அழிக்க வேண்டாம். வங்கிக் கடனுக்குஆ; பொறுப்பாக பனை மரங்களை ஈடு வைக்கும் திட்டம் ஒன்றை பனை அபிவிருத்திச்சபை தயாரித்து வருகிறது. இவ்வருட இறுதிக்குள் அந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும்.

கற்பகதரு என முன்னோரால் அழைக்கப்பட்ட பனைமரத்திற்குதற்போது விடிவு காலம் பிறந்துள்ளது. பனைசார்ந்த கைப்பணிப் பொருள்கள், பனை சார்ந்த உணவுகளுக்கு புலம்பெயர் மக்களிடம் இருந்து நல்ல வரவேற்புக் கிடைக்கின்றது.

அத்துடன் மேற்குலக நாடுகளில் பனம் சாராயம் உள்ளிட்ட மதுசாரங்களுக்கு நல்ல சந்தைவாய்ப்பு உள்ளது.



இந்த நிலைமையில் ஒரு பனை மரம் மூலம் வருடம் ஒன்றிற்கு சராசரியாக ஒரு மில்லியன் ரூபா வருமானத்தைப் பெற முடியும்.

அந்த அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள 15 மில்லியன் பனை மரங்களையும் உச்ச அளவில் பயன்படுத்தி எமது மாகாணங்களின் அபிவிருத்திக்குத் தேவையான நிதியைப் பெற முடியும்.

எந்த ஒரு பயிர் மூலமும் வருடத்திற்கு ஓர் ஏக்கரில் ஒரு மில்லியனை ஈட்ட முடியாது. ஆனால் ஒரு பனை மரம் மூலம் அந்த வருமானத்தைப் பெற முடியும்.

பனையைப் பாதுகாப்பதன் ஊடாக வேலை வாய்ப்பினை அதிகரிக்க முடியும், சுற்றுச்சூழலைப் பேண முடியும், நாட்டிற்குத் தேவையான அந்நிய செலவானியை ஈட்டிக்கொள்ள முடியும்.

பனை மரத்தை வைத்து வங்கிக் கடன் பெறும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது பனம் துறையில் புதுப் புரட்சி ஒன்று உருவாகும்.

பொறுப்பு வைக்கும் பனை மரத்தில் பனங்கள், கருப்பனி உள்ளிட்ட உற்பத்திகளைமேற்கொள்ளும்பட்சத்தில் வங்கிக் கடனுக்கான வட்டியை பனை அபிவிருத்திச்சபை செலுத்தும் திட்டம் ஒன்றையும் அறிமுகப்படுத்தி பனம் தொழிற்துறையை மேலும் ஊக்குவிக்க யோசனைகள் முன்வைக்கப்படுகின்றது.

பனைசார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதன் ஊடாக வருமானம் கிடைப்பதால் வட்டியைச் செலுத்துவது இலகுவான விடயம். இந்த வருட இறுதிக்குள் இந்தத் திட்டம் அமைச்சரவை ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்தப்படும்.

இதனூடாக பனை மரத்தின் அழிவுக்கு காரணமாக இருப்பவர்கள் மனங்களில் பனையை சொத்தாக கருதி பாதுகாக்கும் மனநிலையை ஏற்படுத்த முடியும். அத்துடன் பனம் தொழிற்துறைக்கும் புத்துயிர் கிடைக்கும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# குருக்கள்மடம் கடற்கரை சவுக்கங் காட்டில் திடீர் தீ

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குபட்பட்ட குருக்கள்மடம் கிராமத்தில் கடற்கரையில் சவுக்குமரங்கள் அதிகளவு செறிந்து நிற்கும் காட்டுப்பகுதியில் நேற்று (செவ்வாய்கிழமை) பிற்பகல் திடீரென தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

இதனால் கடற்கரைப் பகுதியிலுள்ள இயற்கை வனப்பு பகுதி தீயால் எரிந்துள்ளதுடன், அதிகளவு மரங்களும் எரிந்துள்ளன. தமது பிரதேசத்தில் அமைந்துள்ள இயற்கை வனப்பு வகுதியில் தீபரவல் ஏற்பட்டுள்ளதை அறிந்த அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்களும், குருக்கள்மடம் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர்களும், ஒன்றிணைந்து தீ மேலும் பரவால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

முன்னரும் இவ்வாறானதொரு சம்பவம் ஏற்பட்டிருந்ததாகவும், இந்நிலையில் இத்தீப்பரவல் சம்பவம் திட்டமிட்ட ஒரு சம்பவமா? இதன் சூத்திரதாரிகள் யார் என்பது தொடர்பில் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அப்பகுதி இளைஞர்கள் தெரிவிக்கின்றனர்.





# சாய்ந்தமருது பொலிஸ் பொதுமக்கள் ஆலோசனைக்குழு அங்குராப்பணம்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பிரிவுக்குள் காணப்படும் குற்றச் செயல்களைக் குறைத்து, பொலிஸாரின் கடமைகளை இலகுபடுத்தும் பொருட்டும், பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தினை ஏற்படுத்தவும், தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக ஆலோசனைக்குழு ஒன்றை அங்குராப்பணம் செய்யும் நிகழ்வு சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் ஆலோசனைக் குழுவின் தலைவர் எம்.கே. இர்ஷாத் கான் தலைமையில் 2025.05.13 ஆம் திகதி இடம்பெற்றது.



சாய்ந்தமருது பொலிஸ் பொதுமக்கள் ஆலோசனைக் குழுவின் செயலாளர் எம்.எம். உதுமாலெவ்வை (ஓய்வு பெற்ற போதனாசிரியர்- வி.ரி.ஏ. அவர்களின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பொலிஸ் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. .இப்னு அஸார் கலந்து கொண்டார். மேலும் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

நிகழ்வின்போது சாய்ந்தமருதில் போக்குவரத்துச் சட்டம் மற்றும் சுற்றாடல் மாசுபடுவதை தடுத்தல் தொடர்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதில் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளை பின்பற்றுவது தொடர்பிலும் சுற்றுச்சூழலை பாதுகாப்பது தொடர்பிலும் பொலிஸாரால் கையாளக்கூடிய ஏனைய பல்வேறு விடயங்களை செயற்படுத்த ஆலோசனைகளைவழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

விசேடமாக சாய்ந்தமருதில் வீதி ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு ஏனைய பொலிஸ் நிலையங்களின் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு குற்றவாளிகளை அடையாளம்கண்டு தண்டனை வழங்கல், சாய்ந்தமருது ஒஸ்மன் வீதிக்கு விஷேட போக்குவரத்து வழிமுறைகளைக் கையாளுதல், இரவு நேரங்களில் தேவையற்ற முறையில் வீதிகளில் கூடியிருப்பவர்கள் மற்றும் உலாவித் திரிபவர்கள் தொடர்பில் விஷேட கண்காணிப்பைச் செலுத்துதல் மற்றும் நள்ளிரவுகளில் திறந்திருக்கும் கடைகள் தொடர்பில் கண்காணிப்புச் செலுத்துதல், சிரமதான நிகழ்வுகளில் ஈடுபடுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் பொதுமக்கள் ஆலோசனைக் குழுவில் இணைத்துக்கொள்ளப்பட்டபிரமுகர்களுடன் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸாரும் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கனடா நினைவகம் ஒரு வரலாற்றுப் பதில்

**தமிழினப் படுகொலைக்கு வித்திடப்பட்ட 2009 மே மாதத்தை நினைவுகூரும் வகையில், கனடாவில் இப்போது ஒரு நினைவகம் திறக்கப்பட்டிருப்பது, உலக அளவில் பரவலான நீதிச் சிந்தனையின் முக்கியப் புள்ளியாக இருக்கிறது. ஆனால் இலங்கையிலிருந்து இதற்கு எழும் கண்டனங்கள், அந்த நினைவேந்தலின் சுயநியாயத்தையே வெளிச்சமிடுகின்றன.**

**இலங்கைஅரசும், சிலஅரசியல்கட்சிகளும், இந்த நினைவகத்தைக் கண்டித்து வருவது, இரட்டைப் பொருள்பாடுகளை வெளிக்காட்டுகிறது. 2009ஆம் ஆண்டில்சிறிலங்காஅரசுநடத்தியஇறுதிக்கட்ட்ப்போர் நடவடிக்கைகளில், ஆயிரக்கணக்கான தமிழர்கள் உயிரிழந்தனர். அந்தச் சாவுகளுக்கான நீதியும், உண்மையும் இன்னும் நிலைக்கப் பெறவில்லை. இத்தகைய சூழலில், உலக நாடுகள் சில, குறிப்பாக கனடா, அந்த நினைவுகளை அடையாளப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவதில் யாதொரு தவறும் இல்லை.**

**தம்மை வன்முறை இல்லாத நாடாக சித்தரிக்க விரும்பும் இலங்கை அரசு, இனப்படு கொலைஎன்றசொற்றொடருக்குகடுமையாகஎதிர்ப்பு தெரிவித்துவருகிறது. ஆனால்ஐநாவிசாரணைகள், மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகள், மக்கள்வழங்கிய சாட்சியங்கள் அனைத்தும் அந்தச் செயல்கள் எவ்வளவு கொடூரமானவையெனக் கூறுகின்றன. இந்நிலையில் ஒரு நினைவகம் என்பது வேதனைதான் ஆனால் அதைவிட முக்கியமாக, வரலாற்றின் உண்மையை மறைக்க முடியாது என்கிற அறிவாற்றலின் பிரதிபலிப்பாகவும் அது இருக்கிறது.**

**அத்துடன், நினைவகம் என்பது பழிவாங்கும் கருவியல்ல. அது வரலாற்றைக் கற்பிக்கவும், இனவாதத்தின் விளைவுகளை எதிர்கொள்ளவும், மீண்டும் அத்தகைய நிகழ்வுகள் நிகழக்கூடாது என்ற விழிப்புணர்வைஉருவாக்கவும்உதவும். பெரும்பாலான கனடியர்கள், சுதந்திரத்திற்கும், மனித உரிமைக்கும் முக்கியத்துவம்அளிக்கிறவர்கள். அந்தப்பின்புலத்தில் தமிழர் படுகொலைக்கு நினைவாக அமைக்கப்படும் நினைவகம், அவர்களது பன்முகத்தன்மைக்கும், நீதியை வழிகாட்டும் பன்மனப்பான்மைக்கும் ஒரு சான்றாகும்.**

**இலங்கை அரசு உண்மையிலேயே தீர்வுகளைக் விரும்புகிறதா அல்லது கடந்ததை மறைக்கும் முயற்சியில் ஈடுபடுகிறதா என்பதே இங்கு கேள்வி. ஒருவேளை அவர்கள் உண்மையை ஒப்புக்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கோரி, வரலாற்றை நியாயமாக எதிர்கொள்வார்கள் என்ற நம்பிக்கையை தமிழர் உலகம் இதயத்தின் ஒரு கடைசி மூலையில் வைத்திருக்கிறது. அந்த நாள்வரைக்கும், கனடா போன்ற நாடுகளில் இந்த நினைவகங்கள் தமிழரின் சுடரொளியாய் நிலைத்திருக்கும்.**

# வலி தரும் நினைவின் வாக்கு அரசியல்

**மதுசுதன்**

2009 மே 18 உடன் இலங்கையில் அரச படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போர் முடிவுக்கு வந்தது. இந்த இறுதிப்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், அவயவங்களை இழந்தும், காணமல் ஆக்கப்பட்டும் , பொருளாதாரத்தினை இழந்தும் மிகவும் கொடூரமான தாங்கிக்கொள்ளமுடியா இழப்புகளின சந்தித்து நின்றது தமிழினம்

ஈழ தமிழினமானது ‘இனப்படுகொலை‘ அல்லது ‘ இன அழிப்பு ‘ என்ற சொற்பதங் களினூடாக சிங்கள அரசின் கோர செயல் களை அடையாளப் படுத்தி கொண்டது.

இனப்படுகொலை நினைவாக‘முள்ளிவாய்க் கால் இனப்படுகொலை நினைவு சின்னங்கள்‘ முள்ளிவாய்காலிலும் , யாழ் பல்கலைக்கழ கத்திலும் அமைக்கப் பட்டன. வருடம்தோ றும் நினைவு அனுஸ்டிப் புக்கள் நிகழ்வதுண்டு. கடல்தாண்டிதமிழகத்தில் ‘முள்ளிவாய்க்கால் முற்றம்‘ அமைக்கப்பட்டு எம் மீதான கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளை பதிவு செய்து தமிழ் தலைமுறைகளுக்கு கடத்துகிறது.



இந்த வரிசையில் மிகவும் அவதானத் துக்குரிய அடுத்த பரிணாம நிர்மாணிப்பாக அண்மையில் 10.05.2025 அன்று அதுவும் முள்ளிவாய்கால் பேரவலங்கள் 2009 இல் நிகழ்ந்துகொண்டிருந்த மே மாத காலப்பகுதியில் முள்ளிவாய்க்கால் அவலம் நிகழ்ந்து சுமார் 15 வருடங்களின் பின் கனடாவில் ‘தமிழின அழிப்பு நினைவாலயம்‘ பெருமெடுப்பில் அரச ஆதரவோடும் ஈழ தமிழர்களின் பங்களிப்போடும் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு ஈழ தமிழர் உட்பட உலகத் தமிழர்களின் அவதானம் என்பதை தாண்டி கனேடிய வாழ் மக்கள் , சிங்கள அரசு போன்றவற்றின் மிகுந்த அவதானத்தினையும் பெற்றிருக்கிறது.

2024 ஆம் ஆண்டு கனடா பிரம்டனில் தற்போது திறந்து வைக்கப்பட்ட நினைவாலயத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் சிங்கள மக்களும் சிங்க கொடியுடன் நின்று அடிக்கல் நாட்டுதலுக்கு எதிராக கோசங்களை இட்டது. அதை தடுத்து நிறுத்த ஆர்ப்பாட்டம் மேற்கொண்டது. இந்த அடிக்கல் நாட்டு நிகழ்வில் தமிழ் தரப்பு புலி கொடியோடு நிற்க சிங்கள தரப்பு சிங்க கொடியோடு நின்று தத்தமது ஆதரவு கோசங்களை இட்டது. இந்த எதிர்ப்பு பின்ணணியில் சிங்கள அமைப்புக்களும் , தூதுவராலயங்கள், புலனாய்வாளர்கள் என்பன செயல்பட்டிருந்தன. அப்படி இருந்தும் அடிக்கல் நாட்டு வைப்பவம் நிகழ்தேறியது , 10.05.2025 நினைவாலயமும் பிரமாண்டமாக உணர்வெழுச்சியோடு திறந்தும் வைக்கப்பட்டாயிற்று.

இனித்தான்கட்டுரையின்மையபகுதிக்குள் கூட்டி செல்ல போகிறேன்.

2024 கனடா பிரம்டன் நகரின் பூங்காவில் இந்த ‘தமிழின அழிப்பு நினைவாலயம்‘ உருவாக்குவதற்கான அடிக்கல் நாட்டு நிகழ்விலும் பிரம்டன் மாநகர நகர பிதா பற்றிக் பிறவுணும் வேறு அரசியல்வாதிகளும் கலந்து கொண்டிருந்தார்கள்.

அந்த நிகழ்வில் சிங்கள மக்களின் எதிர்ப்புக்களை, கோசங்களை ஆர்ப்பாட்டங் களை நேரில் பார்த்திருந்தார்கள். அன்றைய நாளிலும் அடிக்கல் நாட்டிய பின் நகர பிதா பற்றிக் பிறவுண் பேசும்போது ‘தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலைதான், அதை மறுப்பவர்கள் இலங்கைக்கே தாராளமாக திரும்பிப் போகலாம் ,இந்த நினைவாலயம் அமைக்கப்பட்டே தீரும் ‘ என கர்ச்சித்தார். அவர் சிங்கள மக்களை நோக்கித்தான் கர்ச்சித்தார் என்பது விளக்கத்துக்குரியது.

அதன் பின் சமீபத்தைய நிகழ்வு 10.05.2025 பிரம்டன் மாநகரின் ‘ தமிழின அழிப்பு நினைவாலயம்‘ நகர பிதா பற்றிக் பிறவுணினால் திறந்துவைக்கப்பட்ட பின் அவர் உரையாற்றுகையில் ஓர் இடத்தில் சொன்னார் ‘இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்ந்தது இனப்படுகொலைதான், தமிழர்களுக்கு இனப்படுகொலை நடக்கவில்லை என்பவர்களை கனடா வரவேற்காது, பிரம்டன் வரவேற்காது. அவர்கள் கொழும்புக்குத் திரும்பிப் போகலாம்!!!‘ என சூளுறைத்திருந்தார். பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் கூடியிருந்த மக்கள் கூட்டத்தில் நகர பிதாவின் இந்த உணர்சிப் பிரவாக பேச்சானது அங்கு கூடியிருந்தவர்களையும் சரி அதை நேரலையிலோ அல்லது சமூக ஊடகங்கள் வாயிலாக பார்த்த இலங்கை தமிழர்கள் மற்றும்புலம்பெயர்தமிழர்களுக்கும்மட்டற்ற மகிழ்சியை ஏற்படுத்தியது. ஆனையிறவு களம் புலிகளிடம் வீழ்ந்த போது எப்படி தமிழர்கள் துள்ளி மகிழ்தார்களோ அப்படி உணர்ச்சி பிரவாகத்தில் திளைத்தார்கள்.

பலர் நகரபிதா பற்றிக் பிரவுண் பேச்சினை பல்லாயிரக்கணக்கில் பகிர்ந்து தமிழ் ஈழத்தின் புதிய மீட்பராக அவரை வரிந்து கட்டிக்கொண்டுள்ளார்கள். .

கடல்தாண்டிய எமக்கே உரித்தில்லாத ஓர் தேசத்தில் எம் இனத்துக்கு அடைக்கலமும் தந்து அர்சியல் உரிமை உட்பட்ட அத்தனை உரிமைகளும் தந்து அவர்களுக்கு சரிசமனாக எல்லா சலுகைகளையும் தந்து அனுபவிக்கவிட்ட நாட்டில் எம் தமிழன அழிப்பை நிலைபேறாக நிலைநிறுத்தி காலத்தால் கடத்த நிலமும் தந்து அனுமதியும் தந்து கட்டி முடித்து திறந்தும் வைத்து எமக்கு சார்பான பேச்சும் பேசும்போது தமிழர்களுக்கு உணர்ச்சி பிரவாகம் மேலோங்குவதில் அதிசயம் ஏதுமில்லை, தவறேதுமில்லை!

ஆனால் நான் இந்த நிகழ்வுகளின் பிண்ணனி பற்றியும் அரசியல் பிண்ணணி

# வலி தரும்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

பற்றியும் உண்மையை உடைத்துப் பேச போகிறேன்.

சுதந்திரத்தின் பின்னாக ஈழத்தில் தமிழினத்துக்கு எதிரான கலவரங்கள் 1954,1956, 1983 சிங்களவர்களாக கட்டவிழ்த்து விடப்பட்டன. இந்த கலவர காலகட்டங்களின் பின் பல ஈழ தமிழர்கள் இலங்கையை விட்டு வேறு நாடுகளுக்கு குறிப்பாக ஐரோப்பா, அமெரிக்கா, கனடா போன்ற தேசங்களுக்கு புலம்பெயர தொடங்கினார்கள். அந்த புலம்பெயர்தல் 1983 ஜீலை கலவரத்தோடு கணிசமாக நிகழ்ந்தது. அப்படியாக புலம்பெயர்ந்த முதலாம் தலைமுறையினர் அந்த அந்த நாடுகளில் குடிமகன்களாக மாறி எண்ணிக்கையில் பல்கி பெருகி பொருளாதர வல்லமையிலும், அரசியல் வல்லமையிலும் தவிர்க்க முடியா சக்திகளாக உருவெடுத்து ஓர் தனித்துவ இனமாக பலல்ட்சங்களில் வாழ்ந்து வருகிறார்கள்.

அவர்களின் குடித்தொகை வளர்ச்சியினால் இன்று அந்தந்த நாடுகளில் தங்களுக்கான அரசியல் பிரதிநிதிகளையும்( நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சரகள், மாகாண உறுப்பினர்கள், நகர சபை உறுப்பினர்கள்) உருவாக்கி அந்த நாடுகளின் அரசியலிலும் தவிர்க்க முடியா ஆளுமைகளாக உயர்ந்து நிற்கிறார்கள்.

அந்த அந்த நாடுகளின் அரசியலில் தீர்மானிக்கும் சக்திகளாகவும் வளர்ந்து நிற்கிறார்கள்.

இவ்வாறாக கனடாவில் ஈழ தமிழர்களின் குடித்தொகையும், அரசியல் பங்களிப்பும் முக்கிய ஒன்றாகும். ஈழ தமிழர்களின் குடித்தொகை பரம்பல் நகர சபை தேர்தல்கள், மாகாண சபை தேர்தல்கள், பாராளுமன்ற தேர்தல்களில் முக்கியம் பெறுகின்றன.

கனடாவில் சிங்கள மக்களின் குடித்தொகை என்பது தமிழ் மக்களின் குடித்தொகையுடன் ஒப்பிடுகையில் குறைவே! ஏனெனில் அவர்கள் தமிழர்கள் போன்று போரினால் பாதிக்கப்படவில்லை, அவர்கள் 70, 80களில் எல்லாம் அள்ளு கொள்ளையாக எம்மவர்கள் போல நாட்டை விட்டு புலம் பெயரவில்லை. இதனால் அவர்கள் குடித்தொகை குறைவானது. ஆனாலும் இப்போது கல்வி விசாக்கள், வேலைவாய்ப்புக்கள் என அவர்களும் கணிசமாக கனடாவில் குடியேறிவிட்டார்கள்.

இந்த ஒப்பீட்டினை ஏன் சொல்கிறேன் என்றால் இந்த குடித்தொகை பரம்பல் ஒப்பீட்டில்தான் எல்லா அரசியலும் நகர்கிறது.

அதாவது கனடாவில் ஈழத்தமிழர்களின் குடித்தொகை அவர்களின் வாக்கு பலம் என்பது சிங்கள மக்களை விட பன்மடங்கு அதிகமானது. தமிழர்களின் வாக்கு பலம் கனடாவில் அதிகமானது. அரசியலை தீர்மானிக்க கூடியது. ஆக நின்று நிதானித்து விடயத்துக்குள் வருவோமேயானால்!!!

கனடாபிரம்டன்நகரில்'தமிழினபடுகொலைக்கான நினைவாலயம்' அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வில் சிங்கள மக்கள் ஆர்பாட்டம் செய்தார்கள். அந்த ஆர்பாட்டத்தின் மத்தியிலும் அடிக்கல் நாட்டிவிட்டு பேசிய நகர பிதா பற்றிக் பிறவுண் 'இலங்கையில் தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலைதான் மறுப்பவர்கள் இலங்கை போகலாம்' என்று பேசியதென்பது சிங்கள மக்களை சாடியது என்றாலும் தமிழ் மக்களினை அங்கீகரிகவே! குசிப்படுத்தவே!

அது போல 10.05.2025 அன்றும் நினைவாலயம் திறந்துவைத்தபின்பேசியபோதும்அவர்'இலங்கையில் தமிழர்களுக்கு நிகழ்ந்தது இனப்படுகொலயே, மறுப்பவர்கள் கொழும்பு போகலாம்' என பேசினார். இதுவும் சிங்கள மக்களை சாடியே பேசினார். தமிழ் மக்கள் புகழாங்கிதம் அடைந்தார்கள். அடைவார்கள் எனத்தெரிந்தே பேசினார்.

இந்த நிகழ்வுகளின் பின்ணனி என்னவென்றால் அரசியல் என்னவென்றால் அதிகாரத்திற்கு தேவை அரசியல், அந்த அரசியல் இருப்புக்கு தேவை வாக்கு வங்கி, அந்த வாக்கு வங்கிக்கு தேவை மக்கள் தொகை, குடித்தொகை பரம்பல். ஆம் அந்த குடித்தொகை பரம்பலை ஈழ தமிழினம் சிங்கள மக்களை விட இங்கு கணிசமாக வைத்திருக்கிறது. அதனால் இங்கு ஈழ தமிழன ஆதரவு குரலே மேலெழும்பும். அதனால் தான் இவ்வாறனா தமிழின அழிப்பு நினைவாலய கட்டுமான பணிகள் எல்லாம் சர்வ சாதாரணமாக வெற்றியாக நிகழ்கின்றன.

ஒருவேளை எங்களுக்குச் சமனான அல்லது எங்களுக்கு அதிகமான குடித்தொகை பரம்பலை கனடாவில்சிங்களமக்களும்கொண்டிருப்பார்களாயின் அரசியல் வேறுவிதமாக தான் இருந்துருக்கும். இப்படியான செயல்பாடுகள் ஒன்றும் வெட்டி புடுங்கமுடியாதவையாக தான் போயிருக்கும் . ஏனெனில் இரு பகுதியின் வாக்கு வங்கியும் ஆட்சிக்கு தேவை என்பதே உட்புதைந்த அரசியல்.

முன்னர் பிரதமராக இருந்த ஜஸ்ரின் ரூட்டோ அவர்களும் 'இனப்படுகொலை" தீர்மானத்தினை கொண்டுவந்தார் பின் இலங்கையினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவோம் என சூளுரைத்தார். ஆனால் அவரே பதவியில் நீடிக்க முடியாமல் இராஜினாமா செய்தார்.

பின் தேர்தல் காலங்களில் எதிர்கட்சி தலைவர் பியர் பொலீவியரும் தமிழ் மக்களின் வாக்குகளை பெற 'ஈழத் தமிழின அழிப்புக்கு நீதி கோரி இலங்கையினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டுவருவேன்' என்று வாக்குறுதியத்தார். அவரும் தேர்தலில் தோற்றுவிட்டார்.

ஆக கனடாவின் உள்ளூர் அர்சியல் தொடக்கம் நாடாளுமன்ற அரசியல் வரை தமிழரின் வாக்கு தேவை என்பதற்காக இவ்வாறன கருத்துக்கள் அரசியல் நிகழ்வுகள் நிகழ்ந்தேறும்.

ஏனெனில் தமிழர்கள் இங்கே சிங்களவரை விட குடித்தொகையில் அதிகமாக இருப்பதால் ஒருவேளை வரும்காலத்தில் சிங்களவர்கள் அதிகமாகினால் கட்டமைக்கப்பட்ட நிணைவாலயங்கள் எதிர்காலத்தில் அகற்றப்படவும் வாய்புக்கள் உண்டு. ஏனெனில் எல்லாமே அரசியல் செயல்பாடுகள். எல்லாமே அரசியலுக்காக கட்டமைக்கப்பட்டவை.

இந்த கட்டுரை வரைந்ததன் நோக்கம் என்னவென்றால் போரினால் எப்படி சிதறி தமிழினம் புலம்பெயர்ந்து பல நாடுகளில் பல்கி பெருகி குடித்தொகையில் உயர்ந்து அந்த நாட்டு அரசியலில் தலையிடும் நிலைக்கு வளர்ந்திருக்கிறதோ! அந்த நிலை எம் சொந்த நிலத்தில் ஈழத்தில் இருக்கிறதா என்றால் இல்லை.

ஈழத்தின் தமிழின குடித்தொகை பரம்பல் கணிசமாக குறைகிறது. பிறப்பு வீதம் மிக குறைவாக இருக்கிறது. புலம்பெயர் வீதம் அதிகமாக இருக்கிறது. அதைவிட குடிப்பதம்பலை மாற்றீயமைக்கும் விதத்தில் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் நிகழ்கின்றன, கிழக்கில் பல தமிழ் பெண்களை முஸ்லீம்கள் மணம் முடித்து முசிலிம்களாகவே மாற்றுகிறார்கள்.

இவ்வாறான நிலைகளினால் ஈழத்தில் தமிழின குடிப்பரம்பல் அதள பாதாளத்தில் செல்கிறது.

கடந்த 2024 பாராளுமன்ற தேர்தலில் யாழ்மாவட்டத்தில் 7 ஆக இருந்த ஆசனங்கள் 6 ஆக குறைந்துள்ளது. முன்னர் 11 ஆக கூட இருந்தது. அந்தளவிற்கு மக்கள் குடித்தொகை வீழ்ந்துள்ளது. அதனால் மக்கள் பிரதிநிதித்துவம் குறையும். அரசியல் பலம் குறையும். அரசியல் பலம் குறையும் போது அந்த இனம் இன்னும் பலவீனமாகி நாதியற்று எளிதாக நசுக்கப்படும் நிலைக்கு மாறும்.

புலம்பெயர் தேசங்களில் எங்கள் குடித்தொகை பரம்பலினால் ஓர் வாக்கு வங்கி உண்டு , அரசியல் பிரதிநிதிகள் அதிகரித்து செல்கிறார்கள். அரசில் மக்களுக்கான அரசியல் தலையீட்டினை செய்யக்கூடிய அரசியல் பலம் பெற்றவர்களாக உருமாறி நிற்க, மாறாக ஈழத்தில் குடித்தொகை பரம்பலில் வீழ்சியும், வாக்கு வங்கி வீழ்சியும், மக்கள் பிரதிநிதிகளின் வீழ்ச்சியும் ஆனது ஓர் பாரம்பரிய இனத்தின் அரசியல் வீழ்ச்சிக்கு வித்திடும் அந்த இனத்தின் அரசியல் பலம் வீழ்ந்தால் அந்த இனம் இலகுவாக வீழும்.

இதற்கு சான்று தான் கனடாவில் தமிழின அழிப்பு நிணைவாலயத்திற்கு எதிர்ப்பு கூக்குரல் இட்ட சிங்கள மக்களின் குரல் எடுபடவில்லை நசுக்கப்பட்டது, ஆனால் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் நினைவாலயம் கட்டி திறக்கப்பட்டது.

ஏதனால் என்றால் நூற்றுக்கு நூறு வீதம் எம் இனம் மீதான அனுதாபத்தால் காதலால் அல்ல! எல்லாம் வாக்கு வங்கி அரசியலால். ஒரு வேளை சிங்கள மக்கள் இங்கு எங்களை விட அதிகமாக இருந்திருந்தால் நாம் நினைவாலயத்திற்கு அடிக்கல் நாட்ட இடமும் கிடைத்திருக்காது மீறி நாட்டியிருந்தால் 'யாழ்பாணத்தில் போய் நாட்டுங்கள்' என்றவாறு கூற்றுக்கள் அமைந்திருந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஆகஎல்லாவற்றையும்தீர்மானிப்பதுஇனப்பரம்பல் அதை ஈழத்தில் நிலைநிறுத்துவதும் அதனூடாக அரசியல் பலத்தினை நிரூபிப்பதும் ஒவ்வொரு தமிழனுடைய கடமை. புலம்பெயர் அமைப்புக்கள் நிணைவாலயங்கள் கட்டி வரலாற்றினை சந்ததிகளுக்கு ஊடுகடத்தும் சமாந்தர நேரத்தில் ஈழத்தில் எம் இன பரம்பலை இனவிருத்தியை அரசியல் இருப்பை தக்க வைக்கவும் ஆக்கபூரவமான நடவடிக்கைகளினை முன்னெடுக்க முன்வருவதும் காலத்தின் மிகத்தேவையான ஒன்றாகும்.

பல்லாயிரகணக்கான ஆண்டு ஒடுக்குமுறைகள் இனவழிப்புக்களுக்கு முகம்கொடுத்து தன் இனத்தின் பரம்பலை குறையாமல் பார்த்துகொண்ட கல்வி , பொருளாதாரம் , அரசியல் போன்றவற்றில் தவிர்க்க முடியாத ஆளுமைகளாக வீறுகொண்டெழுந்த பின் தமக்கான தேசத்தினை கட்டியமைத்த யூதர்கள் போல நாமும் குடித்தொகை, கல்வி, பொருளாதாரம், அரசியலில் வளர்ந்து தவிர்க்கமுடியா ஆளுமைகளாக தலைப்பட்டாலே இலக்குகளை அடையமுடியும். இல்லையென்றால் பிஜி தீவில் இந்திய தமிழர்கள் இப்போதும் வாழ்கிறார்கள் ஆனால் தமிழ் பேசமாட்டார்கள் . அதுபோல இலங்கை தீவிலே தமிழ் 'பேசமுடியா தமிழர்களாக'அல்லது 'சிங்களம் பேசும் தமிழர்களாக ' உருமாற போகின்ற நிலைமைகளும் ஏற்படலாம்.



# வவுனியா நெற்போல் பிரிமியர் சம்பியனான பாஸ்ப் ரோடக்ஸ்




வவுனியா நெற்போல் பிரிமியர் லீக் இறுதிப் போட்டியில் பாஸ் ப்ரோடக்ஸ்அணிவெற்றிபெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் நடத்திய வவுனியா நெற்வோல் பிறிமியர் லீக் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியானது திங்கட்கிழமை வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தஇறுதிப்போட்டியில்பிவோட் பார்ட்டி அணி எதிர் பாஸ் ப்ரோடக்டேட் அணி மோதின. இதில் 42:37 என்ற புள்ளி அடிப்படையில் பாஸ் ப்ரோடேக்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக இலங்கையின் தேசிய வலைப்பந்தாட்ட வீரர் திலினி டினெசிக்க கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களையும் கேடயங்களையும் வழங்கி வைத்தார்.

குறித்த சுற்றுப்போட்டியில் பவர்பாசர்ஸ், டினாமிக்7, வுளொக்கிங் றொக்கெற்ஸ், பிவோட் பாட்டி, பாஸ்ட் புரெக்டர்ஸ் ஆகிய அணிகள் பங்குபற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. 100




# அர் ரஹ்மா குர்ஆன் கலாசாலையின் 18 ஆவது மாணவர் வெளியேறல்

(பர்ஸான்)

ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதுரியா - மாஞ்சோலை அர் ரஹ்மா குர்ஆன் கலாசாலையின் 18 ஆவது மாணவர் வெளியேற்று விழா ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கலாசாலையின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ.எஸ்.றியாஸ் (ஸஹ்வி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 14 மாணவர்கள் அல்குர்ஆனைக் கற்று வெளியேறியுள்ளனர்.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரும், மீராவோடை உம்மு சுலைம் மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபருமான அஷ்ஷெய்க் ஏ.எல்.பீர் முகம்மட் காஸிமி கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதிகளாக நாவலடி அந்நூர் அக்டமியின் அதிபர் அஷ்ஷெய்க் ஏ.ஹபீப் காஸிமி, மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் எம்.பி.நபீர் மற்றும் பிரதேச பள்ளிவாசல்களின் தலைவர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, மாணவர்களின் ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன்,குர்ஆனைக்கற்றுவெளியேறும்மாணவர்களுக்கும் மற்றும் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் அதிதிகளினால் நினைவுச் சின்னங்கள், சான்றிதழ்கள், பரிசில்கள் ஆகியவை வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





காலைக்கதிர் Kalaikkathir

# உப்பு விலை கட்டுமீறி உயர்ந்ததினால் உணவு பதப்படுத்தும் தொழில் பாதிப்பு

உப்பு விலை உயர்வால் உணவுப் பொருள்களைப் பதப்படுத்த முடியவில்லை என உப உணவு பதனீட்டாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த நவெம்பர் மாதத்திற்குப் பின்னராக இருந்து இந்த நிலைமை நீடிப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

கொரோனா வைரஸ் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலவிய காலத்திலேயே 60 ரூபாவுக்கு விற்ற ஒரு கிலோ கல் உப்பு சமீப சில நாள்களுக்கு முன்னர் சடுதியாக விலை அதிகரித்து தற்போது ஒரு கிலோ 350 ரூபா வரை விற்கப்படுகிறது.

உப்பு விலையின் இந்த அசுர அதிகரிப்பால் உப்பைக் கொண்டு பதனிடப்படும் உப உணவுகளை பதனிட முடியவில்லை என்று உணவு பதனிடுவோர் அங்கலாய்க்கின்றனர்.

இதேவேளை, அதிக விலை கொடுத்து உப்பை வாங்கி உப்பைப் பிரதானமாகக் கொண்டு பதனிடப்படும் மோர் மிளகாய், ஊறுகாய், உப்புக் கருவாடு ஆகியவற்றை பதனிட முடியாததால் ஒரு புறத்தில் உப்புக் கருவாடு, மோர் மிளகாய், ஊறுகாய் என்பனவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மறுபுறத்தில், மிளகாய் கருவாடு தயாரிக்கப் பயன்படும் நெத்தலி, அய்யா மாசி, கூனி இறால், கட்டாப்பாரை போன்ற மீன்கள், தேசிப்பழம் என்பனவற்றை விற்பனை செய்ய முடியவில்லை என்று விவசாயிகளும் மீனவர்களும் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக மிளகாய் உற்பத்தி செய்யப்படும் சில பிரதேசங்களில் ஒரு கிலோகிராம் மிளகாய் 100 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முடியாத நிலையுள்ளதாக அங்குள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று கருவாட்டுக்காக சிறு மீன்களைப் பிடிப்போரும் உப்புக் கருவாடு தயாரிக்க முடியவில்லை என்பதால் சில நேரங்களில் பிடிக்கப்படும் மீன்களை விற்க முடியாததால் அவற்றைக் குப்பையில் கொட்டவேண்டிய நிலை உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

ஒட்டு மொத்தத்தில் உப்பு விலை உயர்வால் விவசாயிகளும், மீனவர்களும், இல்லத்தரசிகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்தவருடத்தில் பெருவெள்ளத்தால் ஏற்பட்ட உப்புப் பற்றாக்குறையை நீக்க இந்தியாவிலிருந்து 30 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பு இறக்குமதி செய்யப்படுவதாகவும் அது பெப்பரவரி மாத இறுதியில் இலங்கைக்கு வந்து சேர்ந்து விடும் என்று அரசு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# முந்தலில் விளையாட்டு விழா

(சியாஜ்)

49 ஆவது தேசிய விளையாட்டு விழாவை முன்னிட்டு முந்தல் பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் கடந்த சனிக்கிழமை முந்தல் சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

வடமேல் மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் முந்தல் பிரதேச செயலகம் ஆகியன இணைந்து இந்த விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகளை நடத்தின.

முந்தல் பிரதேச செயலாளர் எம்.ஏ.ஐ.எச்.பெரேரா தலைமையில் இடம்பெற்ற இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சியில் உதவி பிரதேச செயலாளர் எம்.எஸ்.பி.டபிள்யூ.ரி.எம்.எஸ்.பி. மல்வில உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

மேலும், இந்த நிகழ்வில் சமூக சேவையாளரும், தொழிலதிபருமான அஸ்ரின் அலாவுதீன் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், கணமூலை தாருஸ்ஸலாம் ஜனாஸா நலன்புரி சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.முஸம்மில் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

சமூக சேவையாளரும், தொழிலதிபருமான அஸ்ரின் அலாவுதீன் விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கம் என்பனவற்றை வழங்கி கௌரவித்ததுடன், தனது அனுசரணையில் குறித்த விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற வீரர்களுக்கு வழங்குவதற்காக ஒருதொகை தொப்பிகளையும் முந்தல் பிரதேச செயலாளர் எம்.ஏ.ஐ.எச்.பெரேராவிடம் கையளித்தார்.

# சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் வெசாக்கை முன்னிட்டு கடலை தானம்

(தில்சாத் பர்வீஸ்)

வெசாக் போயா தினத்தையொட்டி கடலைதான நிகழ்வு திங்கட்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் தலைமையில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய முற்றத்தில் நடைபெற்றது.

இதன்போது சம்மாந்துறை பிரதேசத்தில் இருந்து பெரும்பாலான சிறுவர்கள், பெரியவர்கள் என பலரும் கலந்து கொண்டதுடன் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், சம்மாந்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் சம்மாந்துறை பிரதேச முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# சாவகச்சேரி பொலிஸ் நிலைய வெசாக் தின தான நிகழ்வுகள்

(சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின் வெசாக் தின நிகழ்வு மற்றும் அதனையொட்டிய தான நிகழ்வுகள் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றிருந்தது.

மேற்படி நிகழ்வில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.







காலைக்கதிர் Kalaikkathir

## நல்லிணக்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர்கள் பிரதேச பொறுப்பாளர்கள், கட்சியில் முக்கியமானவர்களை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் சந்தித்து கலந்துரையாடிய வேளையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது கட்சியின் தேர்தல் அடைவு நிலை குறித்து ஆராய்ந்ததுடன் கிடைத்த வெற்றிகளை மூலதனமாக கொண்டு அடுத்த கட்டம் நோக்கி முன்னேறிச் செல்வது குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அங்கு டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்ததாவது:

உசுப்பேற்றியோ, போலி வாக்குறுதிகள் போதை ஏற்றும் சன்மானங்களையோ வாக்காளர்களுக்கு கொடுத்திருக்கவில்லை. நாம் வழமை போன்றே எமது நிலைப்பாடுகளை வெளிப்படையாகக் கூறி மக்களிடம் சென்றிருந்தோம். அதன் முடிவுகள் வந்துள்ளன. அவை எமக்கு சர்பாக இல்லாவிடினும் கிடைத்தவை தோல்வியிலும் வெற்றிக்கான சமிக்ஞையாகவே இருக்கின்றது. அதேநேரம் ஆட்சியில் பங்கெடுக்கும் விருப்பம் எமக்கில்லை.

தேசிய மக்கள் சக்தி என்ற ஜே.வி.பியிடம் தேசிய நல்லிணக்கம், இனங்களுக்கிடையிலான நல்லுறவு என்பது அறவே இல்லாது போய்விட்டதுடன் அது மறுக்கப்படுள்ளமையால் உள்ளூர் அதிகார சபைகளில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவை நாம் வழங்கப்போவதில்லை. இதுவே கட்சியின் முடிவாகவும் இருக்கின்றது.

அதேநேரம் ஏனைய தமிழ் கட்சிகளுக்கான ஆதரவும் அவர்கள் அதிகரபூர்வமாக கோரும் பட்சத்தில் சூழ்நிலையை கருத்தில் கொண்டே எடுக்கப்படும். குறிப்பாக இது கட்சியின் எதிர்காலம் மற்றும் மக்களின் நலன்களுடன் தொடர்புடையதாகவே இருக்கும் என்றார்.

## பெருந்தோட்ட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியளித்திருக்கின்றார். இந்த சம்பள அதிகரிப்பு விரைவில் பெற்றுக் கொடுக்கப்படும் என்று உறுதியளிக்கின்றோம்.

பெருந்தோட்டக் கம்பனிகளுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மக்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. எனவே அவர்களுக்கு சம்பள அதிகரிப்பு மாத்திரமல்ல, அடிப்படை உரிமைகள் கூட கிடைக்கவில்லை. அவர்களுக்கென சொந்த காணி இல்லை. வீடு இல்லை.

எனவே இவ்வாண்டில் பெருந்தோட்ட மக்களுக்கு 6000 வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். ஒரு வீட்டுக்கு 28 இலட்சம் நிதி ஒதுக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய நிதியுதவியுடன், அரசாங்கத்தின் நிதியும் இதற்காகப் பயன்படுத்தப்படும். 10 பேர்ச் என்ற அளவில் பெருந்தோட்ட மக்களுக்கு காணி வழங்க எதிர்பார்க்கின்றோம்.

இவை மாத்திரமின்றி தேயிலை உற்பத்தி துறையை மேலும் மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு நாம் பொறுப்பு கூறுவோம்.

மலையகத்திலுள்ள பெருந்தோட்ட மக்களையே நாம் மலையக மக்கள் என விளிக்கின்றோம். அவர்களது வாழ்க்கைக்கான அடிப்படை உரிமைகளை வழங்கி, அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## நிலையியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டங்களில் வரைவுத் திருத்தங்களை உருவாக்கி, அத்தகைய தெளிவை வழங்கவும், குழுக்களில் குடிமக்களின் பங்கேற்பை ஊக்குவிக்கவும் உதவுகின்றன என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

துரதிர்ஷ்டவசமாக, 2017 முதல் செயலற்ற தன்மை காரணமாக குறித்த குழுக்களின் முன்னேற்றம் தேக்கமடைந்துள்ளன. இந்த நீண்டகால தாமதம் மேலும் தொடரக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம். மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்குப் பொருந்தக்கூடிய துணைச் சட்டங்களைக் கொண்ட வர்த்தமானி அறிவிப்புகள் மூலம் நிலையியல் குழுக்களை உடனடியாக நிறுவ வேண்டும்.

மேலும், கணினி கட்டமைப்புகள் மீண்டும் செயற்படுத்தப்படும் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. முந்தைய வரைவுகளின் அடிப்படையில் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் தயாரித்த மாதிரி துணைச் சட்டம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மீட்பு செயன்முறை மற்றும் அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட தூய்மையான இலங்கை திட்டம் போன்ற முக்கிய தேசிய முயற்சிகளை செயற்படுத்துவதில் உள்ளூராட்சி மன்றங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன, குறிப்பாக தற்போதைய கடன் நெருக்கடி மற்றும் அதிகரித்து வரும் கட்டணங்களின் பின்னணியில் அவற்றின் பங்களிப்பு இன்றியமையாதது.

எனவே, நாட்டில் உள்ள அனைத்து உள்ளூராட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதற்கானதொரு அத்தியாவசிய நடவடிக்கையாக நிலையியல் குழுக்களை நிறுவுவதுடன், தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்புகளை வெளியிடுமாறு ஜனாதிபதியையும் அந்தந்த மாகாண ஆளுநர்களையும் நாங்கள் வலியுறுத்துகிறோம் என்றார்.

# நம்பிக்கை, வெளிப்படைத் தன்மை மிக்க வர்த்தகச் சூழல் இலங்கையில் இல்லை

### ஜப்பானியத் தூதுவர் கவலை

இலங்கையின் ஊழல், மோசடிகளுக்கு ஜப்பான் இரையாகியுள்ளது. முதலீட்டு வாய்ப்புக்களை ஆராயும் போது இலங்கை முக்கிய இடத்தில் காணப்படுகின்றபோதிலும், நியாயமான நம்பிக்கை மிக்க, வெளிப்படை தன்மையுடைய வர்த்தக சூழலை இங்கு அவதானிக்கக் கூடியதாக இல்லை என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசோமாடா தெரிவித்துள்ளார்.

முதலீட்டு வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்கு அதற்கு பொருத்தமான ஊழல் அற்ற வெளிப்படை தன்மையுடனான வர்த்தக சூழலை உருவாக்குவதற்கு இலங்கை ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜப்பான் தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

பாத்பைன்டர் அமைப்பினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வட்டமேசை கலந்துரையாடலொன்றிலேயே ஜப்பான் தூதுவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஊழல், மோசடிகளால் இலங்கை ஆளும்தரப்பு பெரும் நெருக்கடிகளை சந்தித்திருக்கின்றது. இவ்வாறான நிலைமைகளை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்காக தற்போதைய ஆளும்தரப்பு பொருத்தமான வழிமுறைகளைப் பின்பற்றும் என்று நம்புகின்றோம்.

இலங்கையில் முதலீடுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளின்போது சில ஜப்பான் நிறுவனங்கள் வேறு தரப்பினருடன் பேச்சுக்களை முன்னெடுத்த போது, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலஞ்சம் வழங்குதல், தரகுப்பணம் வழங்குதல் உள்ளிட்ட மோசடிகளுக்கு இடமளிக்கவில்லை.

இதற்கு முன்னர் ஜப்பான் நிறுவனங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. இந்து சமுத்திரத்தில் முதலீட்டு வாய்ப்புக்களை ஆராயும்போது இலங்கைக்கு மிக முக்கிய இடம் காணப்படுகிறது. எவ்வாறிருப்பினும் நியாயமான நம்பிக்கை மிக்க, வெளிப்படை தன்மையுடைய வர்த்தக சூழலை இலங்கையில் அவதானிக்கக் கூடியதாக இல்லை.

ஜப்பான் நிறுவனங்கள் பலவும் இவை தொடர்பில் சுட்டிக்காட்டியிருக்கின்றன. ஊழலை ஒழிக்கும் இலக்குடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றமை மகிழ்ச்சிக்குரியது. இவ்வாறான ஊழல் ஒழிப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது அத்தியாவசியமானது என்று நாம் நம்புகின்றோம்.

பல்வேறு வழிகளிலும் இலங்கையானது ஜப்பானுக்கு மிக முக்கியமான பங்காளியாகவுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டு ஒப்பந்தம், கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்துடன் இலங்கையின் பொருளாதாரம் வழமைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில் இனிவரும் காலங்களில் ஜப்பானின் முதலீட்டு திட்டங்களை இலங்கையில் முன்னெடுப்பது குறித்து ஆராயப்படும். எனவே அதற்கு பொருத்தமான சூழலை இலங்கையில் உருவாக்குவதற்காக ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

### கொழும்பு மாநகர சபையில் ஆட்சியை பிடிக்க

# எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணையவேண்டும்

### சரத் வீரசேகர வேண்டுகோள்

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும். ஆளும்தரப்பின் முறையற்ற செயற்பாடுகளை வெளிப்படுத்தவும், பலமான அழுத்தம் பிரயோகிக்கவும் எதிர்க்கட்சிகள் கொள்கை அடிப்படையில் இணக்கமாகச் செயற்படுதல் அவசியமானது என்று பொது ஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு கூட்டம் இவ்வாரம் கூடவுள்ளது. கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதமதாச விடுத்த அழைப்புக் குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளது.

சரத் வீரசேகர இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சுமார் 700 வரையான உறுப்பினர்களைப் பெற்றுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற அரசியல் குழு கூட்டத்தில் சமகால அரசியல் செயற்பாடுகள் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

பெயர் பட்டியல் அடிப்படையிலான உறுப்பினர் நியமனம் தொடர்பில் ஆராய்வதற்கு முன்னாள் அமைச்சர் காமினி லொகுகே தலைமையில் குழு நியமிக்கப்பட்டது. கொழும்பு மாநகர சபையில் தனித்த பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க முடியாத நிலை ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு ஏற்பட்டுள்ளது.



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தேசிய மக்கள் சக்திக்கு அடுத்தபடியான உறுப்பினர்களை பெற்றுக்கொண்டுள்ளது. சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்தால் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்க முடியும். கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும் என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும்.

இதனை இவ்வாரம் நடைபெறவுள்ள கட்சியின் அரசியல் குழு கூட்டத்தில் வலியுறுத்துவேன். பலமான எதிர்க்கட்சி ஒன்று இல்லாத காரணத்தால்தான் ஆளும்தரப்பு தான்தோன்றித்தனமாகச் செயற்படுகிறது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆளும்தரப்புக்கு அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் செயற்படவேண்டும். பலமான எதிர்க்கட்சி ஒன்று இல்லாவிடின் பலவீனமான அரச நிர்வாகமே தோற்றம் பெறும் - என்றார்.

# டொலர் வருகை அதிகரிப்பு

*வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் ஊடாக கடந்த ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு 2.46 பில்லியன் டொலர்கள் அந்நிய செலாவணி கிடைக்கப்பெற்றுள்ளது.*

*2024 ஆம் ஆண்டு முதல் நான்கு மாத காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 18.3 சதவீத வளர்ச்சி பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. 2024 ஆம் ஆண்டு முதல் நான்கு மாத காலப்பகுதியில் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களினால் நாட்டுக்கு 2.07 பில்லியன் டொலர்கள் அந்நிய செலாவணி கிடைக்கப்பெற்றது.*

*அத்துடன் கடந்த மாதம் மாத்திரம் 646.1 மில்லியன் டொலர்கள் அந்நிய செலாவணியாக கிடைக்கப் பெற்றுள்ளதுடன், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் பண அனுப்பல் வளர்ச்சியடைந்துள்ளது.*

*2023 ஆம் ஆண்டு 314,828 இலங்கையர்கள் தொழில்வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளார்கள். 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 5.8 சதவீத வளர்ச்சியை காட்டுகிறது.*

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# சமூக இளமாணிப்பட்ட பாடநெறியைக் கற்க பணம் செலுத்தியவர்களின் பரிதாப நிலை

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் சமூக இளமாணிப்பட்டப் பாடநெறிக்காக கடந்த வருடம் விண்ணப்பித்து பணமும் செலுத்தியவர்கள் தற்போது தாம் பரிதாப நிலையில் ஏமாற்றப்பட்டிருப்பதாக தெரிவிக்கிறார்கள்.

சமூக இளமாணிப்பட்டப் பாடநெறிக்காக கடந்த 2024. ஒகஸ்ற் மாதம் 26 ஆம் திகதி முன் பதிவுக்காக 10000 ரூபா பணத்தையும் அதற்குப் பின்னர் 2025.01.28 மாணவர்களை அலுவலக முறையில் பதிவு செய்வதற்கான கடிதம் ஒன்றை வட்ஸ்அப் குழுமத்தில் பதிவிட்டு அதில் கூறப்பட்ட விதிமுறைகளுக்கு அமைய தவணைக்கட்டணம் 115000 ரூபா செலுத்துமாறு கேட்கப்படடிருந்தது.

அதன்படி இந்த விண்ணப்பதாரிகள் பதிவுக் கட்டணம் தவணைக் கட்டணம் ஆகியவை சேர்த்து ஒரு விண்ணப்பதாரி தலா ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலுத்தியுள்ளார்.

அதன்படி சுமார் 26 விண்ணப்பதாரிகள் பணம் செலுத்தி விண்ணப்பித்துள்ளனர்;.

ஆனால், இவ்வாறு சமூக இளமாணிப்பட்டப் பாடநெறிக்காக முறைப்படி விண்ணப்பித்து பணம் செலுத்திசுமார் ஒருவருடம் நெருங்கிஇருக்கின்றபோதும் இன்னமும் பாடநெறி தொடங்குவதாக எந்தவொரு அறிவித்தல்களும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் இருந்து கிடைக்கவில்லை என்று விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால்தாம் ஏமாற்றமடைந்திருப்பதாகத் தெரிவித்து மாணவர்கள் தாம் செலுத்திய பணத்தையாவது மீளளிக்குமாறு கோரி தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு வேண்டுகோள் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இது பற்றி பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மேலும் தெரிவிக்கையில் -

தேசியசமூகஅபிவிருத்திநிறுவனத்தால்நாங்கள்பணம் செலுத்திய பற்றுச்சீட்டு, மற்றுமுள்ள ஆவணங்களை பெற்றுக்கொண்டு அவர்களது நிறுவனத்தின் பணம் செலுத்தியதற்கு ஆதாரமாக பற்றுச்சீட்டினை வழங்கிவிட்டு கற்றல் தொடர்பான விவரங்களை அறிவிக்கிறோம் என்று கூறினார்கள்.

பின்னர் காலம் கடந்து செல்வதால் நாங்கள் பாடத்திட்ட ஒழுங்கிணைப்பாளர்களை தொடர்பு கொண்டோம். நாளுக்கு நாள் வெள;வேறான கருத்துக்களை பகிர்ந்தார்கள். சரியான பதில் கிடைக்கப்பெற வில்லை. தமிழ் மொழிக்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரை நாடினோம். அவரும் இன்னொரு அதிகாரியின் இலக்கத்தைத் தந்தார். அவரிடம் விவரம் கேட்ட பொழுது அவர் இக்கற்கை நெறியைத் தொடர்வதா? அல்லது செலுத்திய கட்டணத்தை மீளளிப்பதா என்று தீர்மானித்து விட்டு சொல்கிறோம். - என்றார். இவ்வாறே ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணங்கள் சொல்லிக்கொண்டே காலம் கழித்து விட்டார்கள்' . - என்று தெரிவித்தனர்.




இதுவிடயமாக தேசியசமூகஅபிவிருத்திநிறுவகத்திற்கு பாதிக்கப்பட்டவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் நாங்கள் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் லியனகேமுல்லை சீதுவையில் அமைந்திருக்கும் நிறுவனத்தில் சமூக இளமாணி பாடநெறி வெளிவாரி பட்டப்படிப்பிற்கு கடந்த 26.08.2024 அன்று பதிவு செய்திருந்தோம்.

இந்த பாடநெறி தற்பொழுது உங்கள் நிறுவனத்தால் தொடங்க முடியாது எனவும், நிர்வாகத்தால் அது இடைநிறுத்தப்பட்டுள்ளது எனவும் உங்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால், திட்டமிட்டபடி நாங்கள் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப்பாடநெறிக்காக நாங்கள் ஒவ்வொருவரும் தலா ரூ. 1,25,000 (ஒரு லட்சத்து இருப்பத்தைந்தாயிரம் ரூபா) பணத்தை செலுத்தியுள்ளோம். எனவே, பாடநெறி இன்னமும் உங்கள் நிறுவனத்தால் தொடங்கப்படவில்லை என்பதால் அந்தப் பாடநெறிக்காக எங்களால் செலுத்தப்பட்ட 125000 ரூபா தொகையை எனக்கு மீளளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தப் பட்டப்படிப்பினை ஆரம்பிப்பதாக கூறி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆரம்பிக்கப்படாமைக்கான காரணமும் கூறப்படவில்லை. பணம் செலுத்தியவர்கள் தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்கின்றபோது அதற்கான ஒழுங்கான பதிலையும் வழங்குவதில்லை. அதுமட்டுமில்லாமல் இந்த பட்டப்படிப்பினை தொடர்வதற்கான அனுமதி இல்லாமல் இதற்கான விண்ணப்பத்தை பெற்று விண்ணப்பித்தவர்களிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு அதற்கான முடிவையும் கூறாமல் உள்ளீர்கள். இந்த செயற்பாடானது உங்களுடைய திறனற்ற நிர்வாகத்தை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. எப்படி உங்களால் ஓர் அனுமதி இல்லாத வெளிவாரி பட்டப்படிப்பினை தொடர்வதற்கான விண்ணப்பத்தை கோர முடியும்.

இதற்கான பதிலை கட்டாயம் கூறியே ஆக வேண்டும். இந்த பட்டப்படிப்பினை பதிவு செய்வதற்கு உங்கள் நிறுவனத்திற்கு வந்திருந்தோம். அதற்கான செலவீனத்தை யார் தருவார்கள்? நீண்ட காலமாகக் காத்திருந்தோம். இதனை நம்பி வேறு எந்த வெளிவாரிப் பட்டப்படிப்புக்கும் விண்ணப்பிக்கவில்லை. விண்ணப்பம் கோரப்பட்ட ஏனைய வெளிவாரிப்பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் காலப்பகுதியும் முடிவடைந்துள்ளது. உங்களுடைய இந்த பொறுப்பற்ற நிர்வாகத் திறமையால் எங்களுடைய காலமும் பணமும் வீண் விரையமானதுதான் மிஞ்சியுள்ளது. நாங்கள் அனுப்பிய ஈமெயிலுக்கோ அல்ல பதிவுத் தபாலுக்கோ இதுவரை உங்களிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. என அந்த விண்ணப்பதாரிகள் தெரிவிக்கின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# இடப்பெயர்வின் கொடூர வலி எனக்கும் நன்றாகவே தெரியும்

## மயிலிட்டி நிகழ்வில் ஆளுநர் வேதநாயகன் இடித்துரைப்பு



நாங்கள் இந்தப் பகுதிகளை விட்டு இடம்பெயராமல் இருந்திருந்தால் இன்று நாம் எங்கேயோ முன்னேறிச் சென்றிருப்போம். அதைக் கற்பனை செய்து பார்க்கவே மகிழ்ச்சியாக இருக்கின்றது. இடப்பெயர்வின் வலி உங்களைப்போல எனக்கும் நன்றாகவே தெரியும். நானும் உங்களைப்போன்று ஈடம்பெயர்ந்துசென்றஒருவன்தான்எனவடக்கு மாகாண கௌரவ ஆளுநர் வேதநாயகன் தெரிவித்தார்.

மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றிய சனசமூக நிலையத்துடன் இணைந்த கல்வி நிலைய கட்டடத் திறப்பு விழா மயிலிட்டி சனசமூக நிலைய வீதியில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற ஆளுநர்இ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து கட்டடத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்ததுடன்இ பெயர் பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்தார். அதன் பின்னர் இடம்பெற்ற மேடை நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர் தெரிவித்ததாவது –

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் உதவி அரச அதிபராக நான் கடமையாற்றியிருக்கின்றேன். 1996 ஆம் ஆண்டு நாம் இங்கு வந்தபோது இடம்பெயராமல் தங்கியிருந்த தையிட்டி மக்கள் சிலரை இராணுவத்தினருடன் வந்து நான் பார்வையிட்டிருந்தேன். அப்போது மயிலிட்டி உள்ளிட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வீடுகள் அனைத்தும் நல்ல நிலையில் இருந்ததை நான் நேரடியாகக் கண்டிருந்தேன். 2015 ஆம் ஆண்டு மாவட்டச் செயலராக யாழ். மாவட்டத்துக்கு நான் வந்த பின்னர் மயிலிட்டிப் பகுதியை வந்து பார்வையிட்டபோது அதிர்ச்சியாகவும் கவலையாகவும் இருந்தது. நல்ல நிலையில் இருந்த வீடுகள் பலவும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருந்தன.

2015ஆம் ஆண்டு மாவட்டச் செயலராக நான் வரும்போது மாவிட்டபுரம் சந்தி வரையிலேயே முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் படிப்படியாக இங்கே மீள்குடியேற்றம் நடைபெற்றது. அன்றைய காலத்தில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்காஇ தர்சன ஹெட்டியாராச்சி ஆகியோர் மீள்குடியமர்வுசெயற்பாட்டுக்குமுழுமையாக ஒத்துழைத்திருந்தார்கள். அவர்கள் இன்னும் சில காலம் இருந்திருந்தால் மேலும் பல காணிகளை எம்மால் விடுவித்திருக்க முடியும்.

காணிகளை விடுவிக்கும்போது மகேஸ் சேனநாயக்க சொல்வார்இ நீங்கள் அடுத்த வாரமும் எங்களிடம் வருவீர்கள். அடுத்த காணிகளை விடுவிக்கக் கோருவீர்கள் என்று நகைச்சுவையாகச் சொல்வார். அப்படித்தான் இந்தக் காணி விடுவிப்புக்களைச் செய்தோம். மாவட்டச் செயலராக இருந்தபோது என்னுடன் மிகச் சிறந்த அணி இருந்தது. அப்போது யாழ். மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலர் – காணி– பணியாற்றிய முரளிதரன் மற்றும் இந்தப் பகுதி பிரதேச செயலர்களாக இருந்த சிறிமோகன்இ சிவசிறி ஆகியோரும் என்னுடன் இராணுவத்தினருடன் கலந்துரையாட வருவார்கள். அடிக்கடி இராணுவத்தினரைச் சந்தித்து காணி விடுவிப்புக்கான கோரிக்கையை முன்வைத்தே இவற்றைச் சாத்தியமாக்கியிருந்தோம்.

தற்போது இங்கு வரும்போது இந்தப் பகுதிகளைப் பார்வையிடும்போது மிக்கமகிழ்ச்சியாக இருக்கின்றது. வீடுகளை அமைத்துகட்டடங்களைஅமைத்துமுன்னேறியிருக்கின்றீர்கள். உங்கள் கிராமத்தை வளர்ச்சியடையச் செய்திருக்கின்றீர்கள்.

நிகழ்வின் தலைவர் தனது உரையில் பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தார். நான் அவர் பேசிக் கொண்டிருக்கும்போதே இந்தப் பகுதிக்கான ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.ஸ்ரீபவாணந்தராஜாவுடன் பேசிக் கொண்டிருந்தேன். விரைவில் விசேட கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தி உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றித்தருவோம்இ – என்றார்.



இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் வலி. வடக்குபிரதேசசெயலகஒருங்கிணைப்புக்குழுத்தலைவருமான ஸ்ரீபவாணந்தராஜாஇ நீண்ட காலம் மூடப்பட்டிருந்த பலாலி வீதி திறக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியதுடன் காணி விடுவிப்புத் தொடர்பில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார்.

கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சுகிர்தன்இ இந்தப் பிரதேச மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிகழ்வில் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர். மேலும்இ திருப்பூர் இளைஞர் நன்பணி ஒன்றிய கட்டடம் 3 கோடி ரூபாவுக்கும் அதிகமாக நிதியில் கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir

# கிளிநொச்சியில் வழங்கப்பட்டது முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாள் பல பகுதிகளில் அனுஷ்டிப்பு அந்த வகையில் இன்றைய தினம் கிளிநொச்சி பஸ் தரிப்பு நிலையத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி கிளிநொச்சி பஸ் நிலையத்தில் நேற்று வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக



நேற்றுமுள்ளிவாய்க்கால்கஞ்சிவழங்கப்பட்டது . 316

# திருக்கோவிலிலும் வழங்கப்பட்டது முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி

(சகாதேவராஜா)

முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சார்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) திருக்கோவில் தம்பிலுவில் பொதுச் சந்தைக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது .

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவி செல்வராணி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

முன்னதாக துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன .

பின்பு சந்தைப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜை நடைபெற்றது.

நிறைவாக அங்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது.

இதேபோல்இவ்வாரம்பூராகமாவட்டத்தில் சகல பாகங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# களுவாஞ்சிகுடியிலும் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி

முள்ளிவாய்காலில் உயிர் நீத்த உறவுளை நினைந்து வருடாந்தம் வழங்கப்பட்டுவரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வொன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொதுச் சந்தைப் பகுதியில் நடைபெற்றது.

பி.ஜெபநேசனின் ஏற்பாட்டில் களுவாஞ்சிகுடி பொதுச்சந்தையின் முன்னால் வைத்து கஞ்சி காய்சி சிரட்டியில் மக்களுக்கு பகிரப்பட்டன.





# வவுனியா மாநகர சபையில் தமிழரசுக் கட்சியினர் தோல்வியடைந்தமைக்கு சத்தியலிங்கமே காரணம்

## சிவமோகன் குற்றச்சாட்டு



வவுனியா மாநகரசபையில் தமிழரசுக் கட்சி தோல்வியடைந்தமைக்கு சத்தியலிங்கத்தின் செயற்பாடே காரணம். அவர் அரசியலை நாகரிகமாக செய்யவில்லை என தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முள்ளிவாய்கால் நினைவு நாளை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். இறுதி யுத்ததில் சிறிலங்கா இராணுவத்தால் கொத்துக் கொத்தாக பல ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் என்பது பகிரங்கமான உண்மை. விடுதலைப் புலிகளின் யுத்தம் மௌனிக்கப்படுவதற்கு முன்னர் எமது மக்களை முள்ளிவாய்கால் நோக்கி நகர்த்தியவர்கள் வெளிநாட்டு அரசுகள் தான்.

எனவே அவர்களுக்கு சகலதும் தெரியும். எனவேஇ ஐ.நா அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் இதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டும். நயவஞ்சக தனமாக எமது மக்களை நம்ப வைத்துஇ இனவழிப்பு நடந்தது. இலங்கையில் தமிழருக்கு எதிராக இனவழிப்பு நடந்தது என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்தி கனடாவில் நினைவு தூபி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பிரன்டன் நகர மேயர் அந்த நிகழ்சியை நடத்தியுள்ளார். இது எமது இனத்தின் முதலாவது மைல்கல் என்று கூறலாம். யுத்தம் மௌனிக்கப்பட்ட பின் கொல்லப்பட்டவர்கள் அதிகம். சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலர் கொல்லப்பட்டனர். காணாமல் போகச் செய்யப்பட்டனர். அதேபோல் காயமடைந்து இருந்தவர்கள் முள்ளிவாய்காலில் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டார்கள். முகாம்களில் இருந்தவர்களில் பலர் காணாமல் செய்யப்பட்டனர். கொல்லப்பட்டனர்.

இதற்கு சாட்சிகள் ஏராளம். இப்படி நடந்த இனவழிப்பை எமது தமிழர்களில் இருந்து இனவழிப்பு நடக்கவில்லை. போர்க்குற்றம் தான் நடந்தது என ஐ.நா. வரை எடுத்துச் சென்று மாற்று கதைகளை சொல்லியிருந்தார்கள். கனேடிய அரசு கூறுகிறது இனவழிப்பு நடந்தது. இதை ஏற்றுக் கொள்ளாதாவர்கள் கனடாவில் இருந்து வெளியேறுங்கள் என. நாம் கூறுகின்றேன் தமிழரசுக் கட்சியில் தலைமைப் பதவியில் இருப்பவர்கள் இனவழிப்பு நடக்கவில்லை என கடந்த காலங்களில் கூறியுள்ளார்கள்.

40 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும் எங்களுடன் இருந்த கோடரி காம்புகளால் நீதி கிடைக்கவில்லை. தமிழரசுக் கட்சியில் நிர்வாகப் பொறுப்புக்களில் இருந்து இனவழிப்பு நடக்கவில்லை எனக் கூறியவர்கள் வெளியேற வேண்டும். தமிழரசுக் கட்சி மட்டும் தான் எமது போராட்டத்தை கடந்த வேண்டியவர்கள். கனடா போன்று ஒவ்வொரு நாட்டிலும் நினைவுத் தூபி அமைப்பதற்கான சந்தர்பங்கள் வந்துள்ள நிலையில் இனவழிப்பு நடக்க வில்லை என்று கூறியவர்கள் தமிழர் தேசத்தில் அரசியல் செய்யாது வெளியேறுங்கள். எங்களை வெளியேற்றி விட்டு நீங்கள் குளிர் காய இடமளிக்க முடியாது.

சபைகளை கைப்பற்றி ஆட்சி செய்தால் எல்லாம் கிடைத்து விடும் என நினைகிறார்கள். அதுவல்ல. தேசிய மக்கள் சக்தி எமது பொது எதிரி. எதிரியை எப்பவும் வீழ்த்தலாம். அவர்கள் தானாகவே வெளியேறுவார்கள். தமிழரசுக் கட்சியில் ஒரு சிலர் எடுத்த தீர்மானஙகளால் தான் அவர்களுக்கு இடம் கிடைத்தது. சட்டத்தரணிகளால் வழக்கு போடப்பட்டு தான் தமிழரசுக் கட்சி சின்னாபின்னமாகியுள்ளது.

குடத்தனையில் சுமந்திரன் தான் வாக்களித்து விட்டதாக கை காட்டுவதைப் பார்த்தேன். முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் சுகிர்தனுக்கும் அது தான் வட்டாரம். இருவரும் இருந்தும் கூட அந்த வட்டாரத்தில் அவர்களால் வெல்ல முடியவில்லை. அதேபோல் வவுனியாவில் கடந்த முறை 8 ஆசனங்களை நங்கள் மாநகரசபையில் பெற்றிருந்தோம். இந்த முறை ஒன்று கூட இல்லாமல் போயுள்ளது. தமிழரசுக் கட்சியின் செயற்பாடே அதற்கு காரணம். சத்தியலிங்கத்தின் செயற்பாடு அதற்கு காரணமாக அமைந்தது. அரசியலை நாகரிகமாக அவர் செய்யவில்லை. அதனால் மக்கள் சரியான பாடத்தை கொடுத்துள்ளார்கள். உங்களது தொகுதிகளில் தோற்று விட்டு ஏனைய தொகுதிகைளை வைத்து நாம் வென்று விட்டோம் என மார்தட்ட வேண்டாம்.

அதேபோல் மட்டக்களப்பில் கோட்டைகல்லாறு தோற்கடிகப்பட்டுள்ளது. புளியந்தீவுதோல்வி. குலநாயகத்தின்வல்வெட்டித்துறைஒட்டுமொத்ததொகுதியும் தோல்வி. முல்லைத்தீவு நகரம் ரவிகரன்இ பீற்றர் இளஞ்செழியன் சேர்ந்து வேலை செய்தார்கள் தோல்வி. ரவிகரன் நெடுக நடந்து திரியும் கெக்கிளாய் பிரதேசம் தேசிய மக்கள் சக்தியின் சிங்கள உறுப்பினர் வென்றுளார்.

சிறிதரன் ஒட்டுமொத்தமாக வென்றுள்ளார். மண்முனை சிறிசேனனின் வட்டாம்10 இல் 8 ஐ வென்றுள்ளார். நேரடியக ஆட்சியமைக்க கூடியதாகவுள்ளது. புதுக்குடியிருப்பு எனது தொகுதி அங்கு 12 இல் 11 வென்றுள்ளோம். அந்த 11 பேரும் நான் இருக்கும் போது தெரிவு செய்யப்பட்டர்வர்கள். நல்ல வேளை அவர்களை மாற்றவில்லை. ஒருவரை என்னுடைய வட்டாரத்தில் மாற்றிப்போட்டார்கள். அவர் தோல்வி. வெற்றிக்கு கரணமானவர்கள் தமிழ் தேசியத்துடன் பயணித்தவர்கள். மற்றவர்களுக்கு நல்ல விடயத்தை மக்கள் சொல்லியுளளார்கள். இதன்பின்னாவது அவர்கள் திருந்தி நடக்க வேண்டும் எனத் தெரிவித்தார். 100

காலைக்கதிர் Kalaikkathir

# ஹக்கீம் ஒரு ‘டம்மி’ தலைவர்

## ஐக்கிய மக்கள் காங்கிரஸ் செயலாளர் விளாசல்

(பாறுக் ஷிஹான்)

றவூப் ஹக்கீம் என்பவர் கட்சி கட்டுப்பாட்டைமீறி செயற்படும் ஒரு சர்வதிகாரியே தவிர ஒரு சாணக்கியத் தலைவர் அல்லர். அதே போன்று தொலைபேசி எஸ்.எம்.எஸ்.ஊடாக,யங்கும் டம்மி தலைவர் என மறைமுகமாகவும் நேரடியாகவும் ஐக்கிய மக்கள் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஏ.சி.எஹியா கான் சாடியுள்ளார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் காங்கிரஸ் காரியாலயத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதேமேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு கருத்து தெரிவித்த அவர் -

நிந்தவூர், ,றக்காமம், மாவடிப்பள்ளி, மாளிகைக்காடு, நாவிதன்வெளி, பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை போன்ற ,டங்களில் ,ருந்து மக்கள் ஹக்கீம் காங்கிரஸை வெளியேற்றியிருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக கல்முனை தொகுதியில் ,ருந்தும் எதிர்காலத்தில் படுதோல்வியுடன் ஹக்கீம் காங்கிரஸ் வெளியேறும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 93 உயர்பீட உறுப்பினர்களும் ஒன்றிணைந்து கல்முனைக்கு வந்தாலும் ஹரீஸின் அரசியல் முன்னெடுப்புக்களுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் ஹக்கீம் காங்கிரஸ் தோல்வியுடன் வெளியேறி செல்வார்கள். வாயிருப்பவர்களிடம் வாக்கு ,ல்லை. வாக்கு ,ருப்பவர்களிடம் வாயில்லை. எனும் நிலையில் ஹக்கீமின் பின்னால் ,ருப்பவர்கள் வாயை மட்டும் வைத்துக்கொண்டு ,ருப்பவர்கள். வாக்கில்லாதவர்களே என்பதை மக்கள் ,ம்முறை நிரூபித்துள்ளார்கள். தலைவரின் சூழ்ச்சியால் கட்சிக்குள் பிரமுகர்களிடையே பிரச்சினையை உருவாக்கி அதில் அவர் குளிர்காய்ந்து கொள்கிறார். அக்கரைப்பற்று மக்கள் அதாஉல்லாவின் பக்கம் ஒன்றிணைந்தது போல, முஷாரஃபின் பின்னால் பொத்துவில் மக்கள் ஒன்றிணைந்தது போல, மாஹிருடன் சம்மாந்துறை மக்கள் ஒன்றிணைந்தது போல, கல்முனை தொகுதி மக்கள் ஹரீஸுடன் ,ருக்கிறார்கள் என்பதை ஒரு தேர்தல் வந்தால் எல்லோரும் தெரிந்து கொள்வார்கள்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரபின் மரணத்தின் பின்னர் படிப்படியாக அழிந்து ,ப்போது ஹக்கீம் காங்கிரஸாக மாறியிருக்கிறது. ,தனால் ஹக்கீம் காங்கிரஸுக்கு ,ம்முறை முஸ்லிம் வாக்காளர்கள் நல்ல பாடம் படிப்பித்திருக்கிறார்கள். ஒரு சிலரின் தனியார் கம்பெனி போன்று ,யங்கும் ,வர்களின் ஆணவத்தை முஸ்லிம் மக்கள் நிராகரித்து ஹக்கீமின் தலைமைத்துவத்தை தோற்கடித்திருக்கிறார்கள்.

அவருக்கு மாற்றீடான தலைமைத்துவமாக எம்.எஸ்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வை மக்கள் ஏற்றுக்கொள்ள தயாராக ,ல்லை. விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தேசிய மக்கள் சக்தி அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அதிகாரத்தில் ,ருக்கும். அவர்களை பலப்படுத்தி சமூக தேவைகளை அடைந்து கொள்வதே புத்திசாலித்தனம். அதை விடுத்து ஹக்கீம் காங்கிரஸின் பின்னால் சென்று நாம் நஷ்டமடைய முடியாது.

முஸ்லிம் சமூகத்தின் சாபக்கேடான ஹக்கீம் காங்கிரசை தோற்கடிக்க சகோதரர் ஹரீஸின் அணியில் ,ணைந்து பயணிக்க நாங்கள் தயாராக ,ருக்கிறோம்.

கல்முனை தொகுதியில் ,டம்பெறவுள்ள உள்ளூராட்சி சபையிலும், மாகாண சபையிலும் நாங்கள் ஹக்கீம் காங்கிரசை துரத்தி மக்களுக்கு விமோசனத்தை பெற்றுக்கொடுப்போம். கல்முனையையும் - சாய்ந்தமருதையும் கசப்புணர்வுடன் மாத்தியமைக்க ஹக்கீம் காங்கிரஸ் செய்த சதிகளை நாங்கள் அறிவோம். பொத்துவில் மக்கள் மு.காவை வெறுத்து முஷாரப்புடன் கைகோர்த்துள்ளார்கள்.

பொத்துவிலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் ,ணைந்து முஷாரப் ஆட்சியமைப்பாராயின் அடுத்த முறை அவர் ஒரு வட்டாரத்தையும் வெல்ல மாட்டார். ரவூப் ஹக்கீம் என்பவர் கட்சி கட்டுப்பாட்டினை மீறி செயற்படும் ஒரு சர்வதிகாரியே தவிர, ஒரு சாணக்கியத் தலைவர் அல்லர். அதே போன்று தொலைபேசி எஸ்.எம்.எஸ்.ஊடாக,யங்கும் டம்மி தலைவர். - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.05.2025இல் வெளியிடப்பெற்றது